வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu





Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 23.07.2025 புதன்கிழமை | இதழ் : 204 | பக்கங்கள் : 12

அரியாலை மனித புதைகுழி:

# குழந்தைகள், சிறார்களுடைய 6 எலும்புக்கூடுகள் அடையாளம்

## குழந்தை பால் குடிக்கும் போத்தலும் மீட்பு





- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 23

**அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் நேற்றைய தினம் 8 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இவற்றில் 6 எலும்புக்கூடுகள் குழந்தைகள் மற்றும் சிறார்களுடையவை என்று சந்தேகிக்கப்படுகிறது. அத்துடன், குழந்தைகள் பால் குடிக்கும் போத்தல் (சூப்பி போத்தல்) ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.**

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் இரண்டாவது கட்ட அகழ்வில் நேற்று செவ்வாய்க்கிழமை 17ஆவது நாளாகவும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, 8 மனித எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. இவற்றில் 6 வரையான எலும்புக்கூடுகள் குழந்தைகள், சிறுவர்களுடையவை என்று சந்தேகிக்கப்படுகிறது. அத்துடன், குழந்தைகள் பால் குடிக்கும் போத்தல் (சூப்பி போத்தல்) ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

11



## 86 கைக்குண்டு, ரவைகளுடன் வவுனியாவில் இருவர் கைது!

- குமார. கோகுலன் -

வவுனியா, ஜூலை 23

86 கைக்குண்டுகள், ரி-56 ரக துப்பாக்கி, கைத்துப்பாக்கிக்கான ரவைகள் மற்றும் 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பவற்றுடன் இருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டார்.

வவுனியா - நேரியகுளம் பகுதியில் வீடு ஒன்றில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த

11


## ஊழியரின் குறைந்தபட்ச வேதன சட்ட திருத்தம் நிறைவேற்றம்!

கொழும்பு, ஜூலை 23

வேலையாட்களின் குறைந்தபட்ச வேதனம் தொடர்பான (திருத்த) சட்டமூலம்மீதான இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றில் ஒருமனதாக மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் வேலையாட்களின் வரவு - செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்த) சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் குறைந்தபட்ச வேதனம் தொடர்பான (திருத்த)

11



அரசியல் கைதிகள் விடுதலை:

## விருட்சத்துக்கு நீர் சேகரிக்கும் வாகன பவனி நேற்று ஆரம்பம்

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 23

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தமிழர் தாயகத்தின் 8 மாவட்டங்களிலும் நடுகை செய்யப்படவுள்ள விடுதலை விருட்சங்களுக்கு தண்ணீர் சேகரிக்கும் வாகன பவனி நேற்று திருநெல்வேலியிலிருந்து ஆரம்பமானது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டம் நாளையும் நாளை

11

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரம் வெளியிடப்பட வேண்டும்

### சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்து

நியூயோர்க், ஜூலை 23

"இலங்கையின் உள்நாட்டு போரின் இறுதியில் சரணடைந்தவர்களின் பெயர் விவரங்களை பெற்று வெளியிடுவதன் மூலம் காணாமல் போனோர் பணிமனை காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடுவதற்கான அதன் ஆணையை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டும்", என்று சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ. நா. குழுவின் 29ஆவது அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் 22 முதல் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த அமர்வில் காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் இலங்கை தனது கடப்பாடுகளை எவ்வாறு நிறைவேற்றியுள்ளது என்பது குறித்து

11

## புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 10இல்!

கொழும்பு,ஜூலை 23

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக்

11

## படுகொலையாளிகளை ராஜபக்‌ஷவினர் காத்தனர்

### நாமலுக்கு கூறிய தொழில் பிரதி அமைச்சர்

கொழும்பு, ஜூலை 23

"ராஜபக்‌ஷவினரே வெள்ளை வான் கடத்தல்காரர்களையும் படுகொலையாளிகளையும் பாதுகாத்து வந்தார்கள். எனவே, எம்மிடம் வாய் கொடுத்து வாங்கிக் கட் டிக்கொள்ள வேண்டாம்" இவ்வாறு நாமல் ராஜபக்‌ஷவுக்கு கூறினார் தொழில் பிரதி

11

## கடனை செலுத்திய பின்னரே எரிபொருள் வரி நீக்கப்படும்

### எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மொத்த கடனையும் செலுத்திய பின்னரே எரிபொருட்கள் மீதான 50 ரூபாய் வரி நீக்கப்படும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

முந்தைய அரசாங்கங்களின் காலத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 88 ஆயிரத்து 400 கோடி ரூபாயை திறைசேரி கையகப்படுத்தியது. இதனால், கடனை அடைப்பதற்காக ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபாய் வரி விதிக்கப்பட்டது.

எனினும், தற்போது இந்தக் கடனில் அரைவாசி செலுத்தப்பட்டு விட்டது. கடன்

11

## தென்னக்கோன் குற்றவாளி; பதவி நீக்கம் செய்யவேண்டும்

### விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்ததாக பாராளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

"பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குற்றவாளி. அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் - என்று வெலிகம துப்பாக்கிச்சூட்டு சம்பவம், அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்த ஆணைக்குழு ஒருமனதாக பரிந்துரைத்துள்ளது" - இவ்வாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் இந்த அறிவிப்பை சபாநாயகர் வெளியிட்டார். அத்துடன், இந்த அறிக்கையை பாராளுமன்ற இணைய தளத்தில் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரதி பொலிஸ் மா அதிபர் பணிமனை முன்பாக

# வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக மூளாய் மக்கள் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூலை 23

வட்டுக்கோட்டை பொலிஸாரின் செயல்பாடுகளுக்கு எதிராகவும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வேண்டியும் மூளாய் பகுதி மக்கள் நேற்றைய தினம் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பணிமனை முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "மூளாயில் மதுபான நிலையம் ஒன்றில் ஏற்பட்ட மோதலே அண்மைய வன்முறைக்கு காரணமாக மாறியது. எங்கள் ஊரை சேர்ந்த ஒருவர் தாக்கப்பட்டபோது மற்றொருவர் ஏன் அவரை தாக்குகிறீர்கள் என்று கேட்டார். அவரும் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டார். இதனால், தாக்குதலுக்கு உட்பட்டவரின் மகன்கள் மதுபான நிலையத்துக்கு கல்லால் எறிந்தனர்.

"காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று திரும்பியநிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்றனர். ஆனால், பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கவில்லை. அத்துடன், தாக்குதல் நடத்திய ஒருவரை கைது செய்திருந்தனர். தாக்குதல் நடத்திய மற்றவர்களையும் அழைத்து எமது தரப்பினரையும் அழைத்து விசாரிக்குமாறு நாம் கோரினோம். ஆனால், பொலிஸார் அதனை செய்யவில்லை. எம்மை அடித்து விரட்டினர்.

"இதன்பின்னர், எமது பகுதியை சேர்ந்த ஒருவரை பிடித்து சென்ற மற்றைய குழுவினர் தாக்குதல் நடத்தினர். இதை அறிந்து நாம் அங்கு சென்றபோது அவரை அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர் ஏற்கனவே தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தமையால் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டவேளை மயக்கமடைந்து விழுந்தார். அவரை மருத்துவ மனைக்கு அனுப்பக் கோரினோம்.

"ஆனால், பொலிஸார் எம்மை தகாத வார்த்தைகளால் திட்டியதுடன், எம்மையும் தாக்கிவிட்டு உள்ளே தூக்கி போடுவோம் என்று கூறினர். பின்னர், மயக்கமடைந்தவரை நாமே மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இதன் பின்னர்தான் ஞாயிற்றுக்கிழமையன்று கலவரம் ஏற்பட்டது. அவர்கள் ஒரு குழுவாக இணைந்து எமது ஊருக்குள் தாக்குதல் நடத்த வந்தபோதே ஊர்மக்கள் அவர்களை விரட்டியடித்துத் தாக்கினர்.

"வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி வந்த பின்னர் பொலிஸ் காவலில் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்டார். பெண் தலைமை குடும்பத்தை சேர்ந்த மாணவன் ஒருவன் குழாய் கிணறு அமைத்தபோது அது தவறான விடயம் என்று கூறி இலஞ்சம் பெற்றனர். சந்தேகநபர் ஒருவரை கிராம சேவகர், பிரதேச செயலர் ஆகியோர் பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவர் சில தினங்களுக்கு பின்னர் பொன்னாலையில் புதர் ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். இதுபோன்ற பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. எனவே இந்த பொறுப்பதிகாரி எமக்கு தேவையில்லை. ஒரு திறமையான பொறுப்பதிகாரியை எமது பொலிஸ் நிலையத்துக்கு வழங்குங்கள்" என்று கோரிக்கை விடுத்தனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் மக்களையும் அழைத்த மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய் பொறுப்பதிகாரியை கடுமையாக எச்சரித்தார். அத்துடன், சந்தேக நபர்களை உடன் கைது செய்யுமாறும் உத்தரவிட்டார். (ஐ-05)

## இரத்த தான முகாம்!

முல்லைத்தீவு, ஜூலை 23

துணுக்காய் பிரதேச செயலக முன்னாள் செயலாளர் அமரர் நா. நந்தகுமார் நினைவாக இரத்த தான நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

நாகலிங்கம் நந்தகுமார் துணுக்காய் பிரதேச செயலராக பணியாற்றியவேளை கடந்த 2007.06.29ஆம் நாளன்று அம்பலப்பெருமாள் குளம் - தேக்கங்காடு பகுதிக்கு பணி நிமித்தம் சென்றபோது இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரின் நினைவாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் வருடாந்தம் இரத்ததான நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

# ஆளணி வெற்றிடங்களை நிரப்ப ஆளுநரிடம் கோரிக்கை

### சாவகச்சேரி பிரதேச சபை விடுத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 23

சாவகச்சேரி பிரதேச சபையின் சபையின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புமாறு வட மாகாண ஆளுநரிடம் பிரதேச சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் பொ. குகதாசன் தலைமையிலான குழுவினர் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் ஆதன மதிப்பீடு மேற்கொண்டு வரி அறவிடுவதற்கான ஒத்துழைப்புகள் மற்றும் சபையின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான கோரிக்கைகளை ஆளுநரிடம் முன்வைத்தனர்.

மேலும், சபையின் இரண்டு உப பணிமனைகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் நிலையில் அவற்றை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டையும் கோரினர்.

இவற்றுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக ஆளுநர் அவர்களுக்கு உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சுழிபுரம் விக்ரோறியாவில் மாணவர்கள் கௌரவிப்பு!



யாழ்ப்பாணம், ஜூலை 23

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்தி மற்றும் விசேட சித்திகளை பெற்ற சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 2022, 2023, 2024 ஆம் ஆண்டுகளில் சிறந்த சித்திகளை பெற்ற மாணவர்களும் நேற்றுமுன்தினம் கல்லூரியில் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரியின் முதல்வர் திருமதி சுலபாமதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை, முன்னாள் ஆசிரியர் பூசலட்சுமி பொன்னுத்துரை ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-05)

# நல்லூர் கந்தன் திருவிழா காலத்தில் தமிழர் பண்பாடு வெளிப்படட்டும்!

### ஆறு. திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23

தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாவின்போது பின்பற்றுமாறு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், " ஈழத்திருநாட்டின் ஈடுஇணையற்ற பெருங் கோவிலாக விளங்குவது நல்லூர் கந்தசுவாமி கோவில். இந்தத் திருக்கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெறவுள்ளது.

பல இலட்சம் மக்கள் நல்லூர் வீதியில் முருகனைக் காண ஒன்றுகூடப் போகிறார்கள். வடக்கில் உள்ள மக்கள் இந்த வாரமே தங்கள் வீடுகளை புனிதப்படுத்தி நல்லூரான் திருவிழாவுக்காக தங்கள் வசிப்பிடத்தையும் புனிதப்படுத்தத் தொடங்கியிருப்பார்கள்.

நல்லூர் சுற்றாடல் தெய்வீகக்களைகட்டத் தொடங்கிவிடும். தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கும் வேலைகள் ஆரவாரமாக தொடங்கிவிடும். அழகன் முருகன் திருவீதியில் அரோகரா சத்தம் இருபத்தைந்து நாட்களும் ஓங்கி ஒலிக்கும். வீதியெல்லாம் புதிய மணல் பரப்பி அங்கப் பிரதிஷ்டை மற்றும் அடியடித்துக் கும்பிடும் அடியவர்க்கு வசதிகள் செய்வார்கள். தெய்வீகச் சூழலாக மாறும் நல்லூர்ச் சுற்றாடலின் சிறப்பு எழுத்தில் வடித்துவிடமுடியாது.

நல்லூர் கந்தன் ஆலயத்தை உருவாக்கி பரம்பரை பரம்பரையாக காத்துவரும் மாப்பாணர் பரம்பரைக்கு சைவ உலகம் என்றும் நன்றிக்கடன் பட்டது. போரில் அழிந்த சைவத் தமிழர்களின் திருக்கோவிலை தமது சொந்த நிலத்தில் தமது குடும்பத்தின் முயற்சியால் உருவாக்கி கடந்த மூன்று நூற்றாண்டுகள் உன்னதமாகக் கட்டிக்காத்து வரும் மாப்பாணர் குடும்பத்தின் மகத்துவத்தை எல்லோரும் நன்கு அறிவர்.

திசைகள் தோறும் கோபுரங்கள் உள்வீதி முழுவதும் உவமை இல்லா அழகுக் காட்சிகள் உருவாக்கி உலகம் வியக்க வைக்கும் நல்லூரான் தனித்துவத்தை எவரும் குறைத்து மதித்து விடமுடியாது. சர்வதேசமே நல்லூர் சிறப்பை வியந்து போற்றுகிறது. அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் வெளியிட்டு வரும் நூலில் உலகம் முழுவதும் வாழும் சைவ மக்கள் சீரிய ஒழுங்கைப் பின்பற்றுவதற்கு நல்லூரை தரிசியுங்கள் என கூறியுள்ளார்கள்.

இந்திய மத்திய அரசின் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் "அப்பப்பா என்ன அதிசயம்? நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குள் கால் எடுத்து வைத்தவுடன் எம்மை மறந்து விடுகிறோம். ரம்மியமான இத் திருக்கோவில் சிறப்புப் பற்றி உலகமே வியக்கிறது" என உரைத்தமை அனைவரும் அறிவர்.

அன்பர்களே நல்லூர் பெருந் திருவிழாக் காலங்களில் குடும்பம் குடும்பமாக சென்று வழிபாடு செய்வதற்கு ஆயத்தமாகுங்கள். தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் வழிபாட்டுக் காலத்தை பேணுங்கள். புனிதமான திருவீதியில் எவரும் மறந்தும் பாதணிகளை அணியாதீர்கள். விசேட தேவையுடையவர்கள் வழிபாடு செய்ய வரும்போது தொண்டர்கள் உதவுங்கள். சுற்றுச்சூழலில் வசிப்பவர்கள் ஆன்மிக அலங்காரங்களை தாம் வசிக்கும் இடங்களில் ஏற்படுத்துங்கள். படம்பிடித்து முருகனை தேடுவதைவிட பக்தியோடு அவனை அகத்தால் உள்வாங்குங்கள். வீதியில் சுவாமி புறப்பட்டால் வேடிக்கைக்கு இடமில்லை. வேலனிடம் விடிவு கேட்டுப் பிரார்த்திப்பதே எமக்கு வேலை என உணருங்கள்.

சஞ்சலமின்றி இறைவன் எமக்குத் தந்த இந்த இனிய நாட்களை ஆனந்தமாகக் கழிப்பதற்கு ஆயத்தமாகுங்கள். அலங்காரக் கந்தனை தரிசிக்க வரும் அடியவர்களாகிய நாம் எளிமையாக நின்று வணங்குவோம். எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக வழிபாட்டு மரபை முன்னெடுத்துச் செல்வோம். எல்லோரும் நல்லூரான் பெருவிழாவைக் கண்ணாரக் காண்போம் - என்றுள்ளது. (ஐ)

# மன்னார் கடற்பரப்பில் கைதான மீனவர்களுக்கு விளக்கமறியல்

மன்னார், ஜூலை 23

மன்னார் கடற்பரப்பில் கைதான நான்கு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்த இந்திய மீனவர்களை கடற்படையினர் படகுடன் கைது செய்தனர். கரைக்கு கொண்டு வரப்பட்ட மீனவர்கள் நால்வரும் சட்ட நடவடிக்கைக்காக நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இந்திய மீனவர்களை நேற்று மன்னாரி நீதி வான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-07)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
23.07.2025 புதன்கிழமை

விசுவாவசு வருடம், ஆடி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## ரோம் சமவாயத்தில் கையெழுத்திடல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ரோம் சமவாயத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சமாந்தர அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ள மேற்படி குழுவின் 29 கூட்டத் தொடரை கருத்தில் கொண்டே மேற்படி அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பி வைத்திருக்கிறது. இதன்மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எவ்வித அரசியல் தலையீடுமின்றி இயங்குவதாகவும் அதற்கான சூழலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வழங்கியிருக்கிறது என்னும் செய்தியும் இந்த அறிக்கையின் பின்னால் இருக்கிறது.

ரோம் சமவாயத்தில் கையெழுத்திட்டால் இலங்கையின் உள்விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நேரடியாகக் கையாள முடியும். உதாரணமாக இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரிப்பதற்கான வாய்ப்பு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கிடைக்கும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இன்றைய நிலைமை மிகவும் பலவீனமாக இருந்தாலும்கூட இலங்கை ஒரு சிறிய நாடு என்னும் வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கைமீது நெருக்கடிகளை மேற்கொள்வது ஒப்பீட்டடிப்படையில் இலகுவானது.

இவ்வாறானதொரு பரிந்துரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இருந்து சென்றிருப்பது ஆச்சரியமானது. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுயாதீன நிறுவனங்களை ஊக்குவிக்கும் சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, இதன்மூலம் ஓர் உள்நாட்டு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பானதும் - நம்பிக்கையுமான அரசியல் சூழல் இலங்கையில் காணப்படுகிறது. என்னும் செய்தியே இதன் மூலம் வெளியுலகை எட்டியிருக்கிறது.

அண்மையில், இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க்கும் உள்நாட்டு பொறிமுறையையே வலியுறுத்திச் சென்றிருந்தார். எனவே, அவரின் பயணத்துக்கும் இதன்போது அவர் உள்நாட்டு பொறிமுறையை வலியுறுத்தியமைக்கும் தற்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்குமாறு வலியுறுத்தியிருப்பதற்கும் இடையில் தொடர்புண்டு.

நல்லாட்சி என்று வர்ணிக்கப்பட்ட ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில்தான் முதன்முதலாக ஐக்கிய நாடுகள் சபையோடு ஒத்துழைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால், அப்போதுகூட, ரோம் சமவாயத்தில் கையெழுத்திடுவதை கொழும்பு ஆதரிக்கவில்லை. குறிப்பாக, இந்த விடயங்களில் நல்ல பரிச்சயமும் அறிவுமுள்ள ரணில் அதனை ஆதரிக்கவில்லை. ஏனெனில், அதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை ரணில் அறிந்திருந்தார். அப்போது ரணில் - மைத்திரி ஆட்சியுடன் தேனிலவில் இருந்த சம்பந்தன் - சுமந்திரன் கூட்டணியும் இது தொடர்பில் வாய் திறக்கவில்லை. ஏனெனில், அவ்வாறு பேசி அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்த - முக்கியமாக ரணிலுக்கு நெருக்கடியை ஏற்படுத்த சம்பந்தன்- சுமந்திரன் கூட்டணி விரும்பவில்லை. அந்தக் காலத்தில் புதுடில்லிக்கு சென்றாலே சிங்கள மக்கள் கோபிப்பார்கள் என்னும் நிலைப்பாட்டிலேயே சம்பந்தன் இருந்தார்.

இவ்வாறான பின்னணியில் அநுர குமார திஸநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ரோம் சமவாயத்தை ஏற்றுக் கொள்ளுமா? தாங்கள் யுத்தத்தோடு தொடர்புபடவில்லை. ஒருவேளை விசாரணை நடந்தால் ராஜபக்ஷவும் அவரின் இராணுவக் கூட்டாளிகளும்தானே பாதிக்கப்படுவர் என்னும் முடிவை எடுப்பார்களா? அவ்வாறு நிகழ்ந்தால் இலங்கை வரலாற்றில் அது ஒரு வரலாற்று ஆச்சரியமாக நிலைக்கலாம். ஆனால், அத்துடன் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியும் முடிவுக்கு வரவும் வாய்ப்பு உண்டு. ஏனெனில், அவ்வாறானதொரு தீர்மானத்தை இலங்கையின் பௌத்த மதபீடங்கள் ஏற்றுக்கொள்ளுமா என்பது ஒன்று இரண்டாவது ஜே.வி. பியின் தேசியவாத சிந்தனை கொண்ட உள்வட்டம் அதனை ஆதரிக்குமா என்பது அடுத்த விடயம்.

*1983 கறுப்பு ஜூலை:*

# பாதுகாப்பான எதிர்காலத்துக்காக கடந்த காலத்தை நினைவுகூருதல்

ஶ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
**தேசிய சமாதானப் பேரவை**
**National Peace Council of Sri Lanka**

*கறுப்பு ஜூலை வன்செயல்களுக்கு பிறகு 42 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், ஆயிரக்கணக்கான தமிழர்களின் வாழ்வைச் சிதறடித்த அந்த வன்செயல்களின் நிழலிலேயே தொடர்ந்தும் இலங்கை வாழ்ந்து கொண்டிருக்கிறது. வீடுகள் எரிக்கப்பட்டன, வாழ்வாதாரங்கள் நிர்மூலம் செய்யப்பட்டன, அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. தலைநகர் கொழும்பில் தொடங்கி நாடுபூராவும் அந்த கலவரங்களும் வன்செயல்களும் பரவின. நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தார்கள்.*

*ஆனால், அந்த கொடிய வன்செயல்களுக்காக இன்னமும் பொறுப்புக் கூறப்படவில்லை. உத்தியோகபூர்வ நீதி கிடைக்கவில்லை. மீண்டும் அத்தகைய வன்செயல்கள் மூளாது என்பதற்கு உத்தரவாதமும் இல்லை. தேசிய சமாதானப் பேரவை கறுப்பு ஜூலையில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுடன் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தவும் மாத்திரமல்ல, முதலில் கடந்த காலத்துக்கு முகங்கொடுத்து பிரச்சினைக்கான காரணிகளை கையாளக் கூடிய அரசியல் தீர்வொன்றைக் காணாவிட்டால், நிலைபேறான நல்லிணக்கத்தை ஒரு போதும் காணமுடியாது என்பதை வலியுறுத்திக் கூறுவதற்காகவும் கறுப்பு ஜூலையின் வருடாந்தத்தை நினைவு கூருகிறது.*

*1983 ஜூலை நிகழ்வுகள் ஒன்றும் தன்னியல்பானவை அல்ல. வன்முறையாக மாறிய நீண்டகாலமாக புரையோடிப்போன இன நெருக்கடியின் விளைவானதே அது. வடக்கில்'வளர்ந்து கொண்டிருந்த தமிழ்த் தீவிர வாதத்தின் பின்னணியில், 13 படைவீரர்களை பலியெடுத்த விடுதலை புலிகளின் தாக்குதல் ஒன்றைத் தொடர்ந்தே தெற்கில் கலவரங்கள் மூண்டன. அரசியல் சூழ்ச்சி, அரசின் செயலின்மை மற்றும் தண்டனையின்மைக் கலாசாரம் (Cuture of impunity) ஆகியவற்றின் விளைவானதே தெற்கின் வன்முறை எதிர்வினை. இந்த உண்மையை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளும்வரை, குணப்படுத்தலை தொடங்க முடியாது.*

*1983 கறுப்பு ஜூலை வன்செயல்களுக்கு யார் பொறுப்பு, எத்தனை பேர் இறந்தார்கள், ஏன் அரசு தவறியது என்ற பதிலளிக்கப்படாத கேள்விகள் நாட்டை தொடர்ந்தும் தொந்தரவு செய்து கொண்டிருக்கின்றன. 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள, 1995 ஆம் ஆண்டில் இருந்து செம்மணியில் கண்டு பிடிக்கப்படும் மனிதப் பதைகுழிகள் மற்றும் நீதி தாமதிக்கப்பட்ட, மறுக்கப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட ஏனைய பல சம்பவங்கள் உட்பட அண்மைய தேசிய அனர்த்தங்கள் பலவற்றில் இந்த தீர்வுகாணப்படாத உண்மைகள் எதிரொலிக்கின்றன.*

*காலம் கடந்து சென்றுகொண்டிருக்கும் நிலையில்,1983 ஜூலையில் நடந்தவற்றை தெரிந்து வைத்திருப்போர் மிகச் சிலராகவே இருப்பர். ஆனால் , கடந்த காலத்தை நாம் தெரிந்து கொள்ளாவிட்டால், பிரச்சினையின் மூலவேர்க் காரணிகளை கையாளக்கூடிய சமாதான எதிர்காலம் ஒன்றுக்கான பயனுறுதியுடைய அத்திபாரத்தை போடமுடியாது.*

*இத்தகைய பின்புலத்தில், அரசாங்கத்தின் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 1983 ஜூலை நிகழ்வுகளை முழுமையாக ஆராயவேண்டிய தேவையையும் அதன் ஆணையில் உள்ளடக்க வேண்டியது அவசியமாகும். நீதி மற்றும் பரஸ்பர மதிப்பின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு நாட்டை எதிர்காலச் சந்ததி பொறுப்பேற்க வேண்டுமானால், நடந்தவை பற்றிய உண்மையையும் அதற்கான காரணங்களையும் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.*

*தீர்வு காணப்படாமல் இருக்கும் இன நெருக்கடியின் விளைவாக உயிரிழந்த சகலரையும் முழுநாடும் நினைவு கூருவதற்கும் அத்தகைய என்று வன்முறைகள் மீண்டும் ஒருபோதும் நிகழாதிருப்பதற்கு உறுதி பூணுவதற்குமான ஒரு தினமாக ஜூலை 23 பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை யோசனை முன்வைக்கிறது. இனம், மதம், சாதி மற்றும் வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பால் சகல சமூகங்களையும் அரவணைத்துப் பாதுகாக்கக் கூடிய அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நீதியான அரசியல் முறைமை ஒன்றின் ஊடாக சுபிட்சமும் அபிவிருத்தியும் நிறைந்த நாடொன்றை கட்டியெழுப்புவதில் இன்றைய தலைமுறையினரிடமும் அரசாங்கத் தலைமைத்துவத்திடமும் இருக்க பற்றுறுதிக்கான ஒரு குறிகாட்டியாக அந்த யோசனை அமையும்.* (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். விவாதங்கள் வெற்றி பெறும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அன்பு ஆதரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கை வரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான பலவேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் உருவாகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**சிம்மம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கன்னி**
கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உறவினர் நண்பர்களால் நன்மை உண்டு. உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் நீங்கிமகிழ்ச்சி அதிகரிக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம்வந்துப் போகும். முக்கிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது. அதிகாரிகளுடன் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. விழிப்புணர்வு தேவைப்படும்.

**தனுசு**
சகோதர வகையில் உதவிகள் உண்டு. சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் வரும். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**மகரம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் அனைவரும் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில்தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். புதுதொழில் தொடங்குவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
பால்ய நண்பர்களில் ஒருவரைசந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். திருப்தி உண்டாகும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.




நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் அண்மையில் நடைபெற்ற நூலகக்கண்காட்சியை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன பார்வையிட்டார். இதன்போது, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன், சபாநாயகருக்கு நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்.

# விவசாய காணி வழங்க வேண்டும் மெனிக்பாம் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 23

வவுனியா, செட்டிக்குளம் கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக மெனிக்பாம் மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அருவித்தோட்டம் பகுதியில் வழங்குவதாக கூறிய ஒரு ஏக்கர் விவசாய காணியை வழங்க வேண்டும் என்று தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

"அரச அதிகாரிகளே! ஏழைகள் ஒருவேளை உணவையாவது நிம்மதியாக உண்ணவிடுங்கள், மெனிக்பாமில் வசிக்கும் மக்களுக்கு வயல் காணி ஒரு ஏக்கர் வீதம் வழங்குக" போன்ற பதாகைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(எ-10)



# யாழ். பழைய கச்சேரியை உலக வங்கி நிபுணர் குழு பார்வையிட்டு ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 23

மரபுச் சுற்றுலா மேம்பாடு மற்றும் தொடர்ச்சியாக பேணுதல் என்ற அடிப்படையில் பழைய கச்சேரியை புனரமைப்பு செய்தல் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபனுடன் உலக வங்கி பொருளாதார நிபுணர் குழுவினர் நேற்று முன்தினம் பார்வையிட்டு ஆராய்ந்தனர்.

இதற்கு முன்னராக மாவட்டச் செயலகத்தில் கடந்த 5 ஆம் மாதம் 26 ஆம் திகதி உலக வங்கி குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பழைய கச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் கோட்டை புனரமைப்பின் அவசியம் தொடர்பில் உலக வங்கி குழுவினரிடம் அரசாங்க அதிபரால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் உட்கட்டுமாணம் மற்றும் சுற்றுலாத்துறையை விருத்தி செய்தல் தொடர்பிலான ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைவாக, கடந்த இரு மாதங்களாக வடக்கின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் செயல்திட்டங்களையும் அதன் சாத்திய நிலைமைகள் தொடர்பில் குறித்த குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)



# மகிழ்ச்சியான குடும்பத்துக்கான நேர்முக சிந்தனையை உருவாக்க பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 23

மகிழ்ச்சியான குடும்பத்துக்கான நேர்முக சிந்தனையை உருவாக்குதல் மற்றும் தகவல் தொடர்பு மூலம் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான மீறலைத் தடுத்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர், குடும்ப வன்முறைகளை குறைப்பதன் மூலம் மகிழ்ச்சியான குடும்பத்தைக் கொண்டு செல்ல முடியும். பிரதேச மட்டத்தில் அடையாளம் கண்டு சரியான வழிகாட்டுதல்களை வழங்க இப் பயிற்சிப் பட்டறையை சரியாக பயன்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையின் வளவாளராக சுகாதார அபிவிருத்தி காரியாலயத்தின் வைத்திய கலாநிதி காமினி விக்கிரம பங்குபற்றினார்.

(எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது எதிரணி அமைக்க முயற்சி?

## தமிழ்க் கட்சிகளுடனும் பேச திட்டம்

கொழும்பு, ஜூலை 23

**பொது எதிரணியை உருவாக்குவதற்குரிய பேச்சுகள் தற்போது தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.**

பாராளுமன்றத்துக்குள்ளும், அதற்கு வெளியிலும் தேசிய முக்கியத்துவமிக்க விடயங்களின்போது ஐக்கிய மக்கள் கூட்டணி, பொதுஜன பெரமுன, சர்வஜன அதிகாரம் , இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணக்கத்துடன் செயற்படுகின்றன.

தேசிய சுதந்திர முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்டவை பாராளுமன்றத்துக்கு வெளியில் இருந்து ஆதரவளித்துள்ளன.

இந்நிலையிலேயே பொது வேலைத்திட்டத்தின்கீழ் எதிரணிகளை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சி இடம்பெற்று, அதற்குரிய பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன. சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களையும் உள்வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைப்பது பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கடும் போக்குடைய சிங்கள தேசியவாத கட்சிகள், அமைப்புகள் என்பனவும் பொது எதிரணி கட்டமைப்புக்குள் வரவுள்ளதால், தமிழ்த் தேசியக் கட்சிகள் இதற்கு இணங்குமா என்பது தெரியவரவில்லை.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித்தின் தலைமைப் பதவிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில், பொது எதிரணியில் தலைமைத்துவ சபையொன்றே உருவாக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

பொது எதிரணி கட்டமைப்புக்குள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய வகிபாகத்தை வகிப்பாரென தெரியவருகின்றது. (அ)

## இரு முக்கிய கட்சிகள் இடையில் சட்டவிரோத வாகன பரிமாற்றம்!

கொழும்பு, ஜூலை 23

கடந்த அரசாங்கத்திலிருந்த அமைச்சர் ஒருவர் எதிர்கட்சியிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வாகனம் ஒன்றை விற்பனை செய்துள்ளார். இருவரும் பிரதான இரு கட்சிகளை சேர்ந்தவர்கள். அவர்கள் ஆட்சியிலிருந்தமையால் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காது இரகசியமாக சட்டத்துக்கு புறம்பாக வானக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

களுத்துறையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-சமீப நாட்களாக சட்டத்திற்கு புறம்பாக வாகனங்களை வைத்திருப்பவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் யார் தொடர்புப்பட்டுள்ளார்கள்? கடந்த அரசாங்கத்திலிருந்த அமைச்சர் ஒருவர் எதிர்கட்சிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வாகனம் ஒன்றை விற்பனை செய்துள்ளார்.

இருவரும் பிரதான இரு கட்சிகளை சேர்ந்தவர்கள். முன்னரே இவ்வாறான ஊழல் தொடர்பில் ஏன் வெளிப்படுத்தப்படவில்லை என கேட்கவேண்டாம். அவர்கள் ஆட்சியில் இருந்தமையால் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காது இரகசியமாக சட்டத்துக்குப் புறம்பாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட வாகன கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தினர் தமது வியாபாரங்களுக்காக மாத்திரமே ஆட்சி செய்தனர். எனினும் நாம் மக்களுக்கு செயல்படும் அரசாங்கம், அதற்காகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து உள்ளோம்-என்றார். (அ)

## வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்த எவ்வித திட்டங்களும் அரசிடம் இல்லை

### கூறுகிறார் பிரதி அமைச்சர்

கொழும்பு, ஜூலை 23

வாகன இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எவ்வித திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மீண்டும் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது குறித்து, பரிசீலித்து வருவதாக அண்மைக் காலமாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

இருப்பினும், அத்தகைய தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அத்தகைய கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாக எந்த விவாதமும் நடத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டு இதுவரையான காலப் பகுதியில், வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரிகள் ஊடாக, 200 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஒரே நாளில் 1,241 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 23

நாடு முழுவதும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில், சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக 1,241 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளின் போது, 254,679 மில்லிகிராம் ஐஸ் , 112,567 மில்லிகிராம் ஹெரோயின், மற்றும் 3,738,356 மில்லிகிராம் கஞ்சா பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், 21,132 நபர்கள், 7,922 வாகனங்கள், மற்றும் 6,545 மோட்டார் சைக்கிள்கள் சோதனை செய்யப்பட்டன. இதன்போது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை உட்பட ஐந்து துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்ட 18 நபர்களும், பல்வேறு குற்றங்களுக்காக 321 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த விசேட நடவடிக்கைகள் கடந்த 20 ஆம் திகதி முழு நாளும் மேற்கொள்ளப்பட்டன. இதில் 5,300-க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படை மற்றும் முப்படைகளின் உறுப்பினர்கள் பங்கேற்றனர். (அ)

## நாட்டில் வயது வந்தோரில் 10 பேரில் ஒருவர் சிறுநீரக நோயால் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் வயது வந்தோரின் 10 பேரில் ஒருவர் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவர் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவை சிறுநீரக நோய்க்கான முதன் மையான காரணங்கள் என்று சங்கத்தின் நிதிச் செயலாளரான உதான ரத்னபால தெரிவித்துள்ளார்.

## சுயாதீன ஆணைக்குழுக்களின் பதவிகளுக்கான நியமனத்துக்கு தகுதியானோரை பரிந்துரைக்குக!

### புத்திஜீவிகள், நிபுணர்கள் 117 பேர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் பதவிகளுக்கான நியமனங்களை மேற்கொள்ளும்போது அதனுடன் தொடர்புடைய விடய அறிவு, அனுபவம் மற்றும் தேர்ச்சி என்பவற்றைக்கொண்ட நபர்களை மாத்திரம் பரிந்துரைக்குமாறும், இந்நியமனங்களின்போது ஜனாதிபதி உரிய அளவுகோள்களைப் பின்பற்றவேண்டும் எனவும் சுயாதீன ஆணைக் குழுக்களின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரிகள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், பேராசிரியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், தொழிற்சங்கவாதிகள் 117 பேர் அரசியலமைப் புப்பேரவையிடமும், ஜனாதிபதியிடமும் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கான தவிசாளர் நியமனப் பரிந்துரை தொடர்பில் அவ்வாணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் எஸ்.ஜி.புஞ்சிஹேவா, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சுவஸ்திகா அருலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய, கலாநிதி லயனல் போபகே ஆகியோர் உள்ளடங்கலாக சுயாதீன ஆணைக்குழுக்களின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரிகள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், பேராசிரியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், தொழிற்சங்கவாதிகள் என 117 பேர் கையெழுத்திட்டு அரசியலமைப்புப் பேரவைக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியிருப்பதாவது:

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தவிசாளராக பொருத்தமானதொரு நபரைப் பரிந்துரைப்பதற்கு அரசியலமைப்புப்பேரவை தயாராக இருக்கிறது.

அதேவேளை அவ் வாணைக் குழுவுக்கு தகுதியான நபரொருவர் நியமிக்கப்படுகி றாரா என்பது பற்றிய சமூகக் கலந்துரையாடல் ஒன்றும் உருவாகியிருக்கிறது.

அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு தகவல்கோரல் உரிமையை பயன்படுத்துவதற்கும், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றுடன்கூடிய கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்குமான பணி தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படுவதனால், தவிசாளர் நியமனத்தின்போது இவ்விடயங்கள் கருத்திற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

அதேவேளை மேற்படி நியமனத்தின்போது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 12(2)(அ)(1) உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக, குறித்த நபர் பொதுவாழ்க்கையில் மனித உரிமைகளை முன்னிலைப் படுத்துபவராகவும், ஜனநாயக நடைமுறைகளைக் கடைப்பிடிப்பவராகவும் இருப்பது மிகமுக்கியமாகும்.

எனவே இவ்விடயத்தில் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை உறுதிசெய்யும் வகையில், தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் பதவிகளுக்கான நியமனங்களை மேற்கொள்ளும் போது அதனுடன் தொடர்புடைய விடய அறிவு, அனுபவம் மற்றும் தேர்ச்சி என்பவற்றைக் கொண்ட நபர்களை மாத்திரம் பரிந்துரைக்குமாறும், இந்நியமனங்களின்போது ஜனாதிபதியும் மேற்படி அளவுகோள்களைப் பின்பற்றவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்-என்றுள்ளது. (அ)

## புதிய மின்னணுஅடையாள அட்டை விரைவில்


கொழும்பு, ஜூலை 23

மின்னணு தேசிய அடையாள அட்டை (e-NIC) எதிர்வரும் 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

மின்னணு தேசிய அடையாள அட்டை அமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு, தேசிய அடையாள அட்டையை டிஜிற்றல் மயமாக்கும் திட்டம் 2012 இல் தொடங்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

தற்போது பயன்படுத்தப் படும் பிளாஸ்ரிக் அடையாள அட்டைகள் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றும்,

அதனால் டிஜிற்றல் அடையாள அமைப்புக்குச் செல்ல



வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு வாக்குறுதியை அநுர நிறைவேற்றவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 23**

**தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு, புதிய அரசியலமைப்பு என்பன தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்தினார்.**

"புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் என தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார். விரைவில் அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும், இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படும் என்றெல்லாம் உறுதி மொழிகள் வழங்கப்பட்டன. ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. எனினும், புதிய அரசியலமைப்பு தொடர்பில் அவர் தற்போது ஒரு வசனம்கூட கதைப்பதில்லை.குறைந்தபட்சம் எப்போது இதற்குரிய பணி ஆரம்பமாகும். எப்போது நிறைவுபெறும் என்பது தொடர்பில்கூட கருத்துத் தெரிவிப்பதில்லை." எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் நாட்டில் அரசியற் கலாசாரத்தை மாற்றுவதற்கு இருந்த வாய்ப்பை அவர் இல்லாமல் செய்து வருகின்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்து அதிகாரத்தைச் சுவைத்து வருகின்றார். அதற்கு அப்பால் சென்று, அரசியலமைப்பு மறுசீரமைப்பைச் செய்வதற்கும் அவர் தயாரில்லை என்பது தெரிகின்றது.

மேற்படி உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாதுள்ள சூழ்நிலையில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையை இல்லாது செய்வதற்கும். அரசியலமைப்புச் சபையின் அதிகாரத்தைக் குறைப்பதற்கும் அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது. இதற்காக அரசியலமைப்பு மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளது என வும் கூறப்படுகின்றது. இது பாரதூரமான விடயமாகும். புதிய அரசியலமைப்பை ஒதுக்கி விட்டு, மக்கள் ஆணையை மீறும் வகையில் அரசாங்கத்தின் அணுகுமுறைகள் உள்ளன." - என அஜித் பி பெரேரா மேலும் குறிப்பிட்டார். (அ)

# "தயாசிறிக்கு உப தலைவர் பதவி வழங்குவது பற்றி முடிவு இல்லை"

கொழும்பு, ஜூலை 23

"பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஐக்கிய மக்கள் சக்தியின் உப தலைவராக நியமிப்பதற்குரிய எந்தவொரு முடிவும் கட்சிக்குள் எடுக்கப்படவில்லை. அது பற்றி கலந்துரையாடப்படவும் இல்லை என்று திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- தயாசிறி ஜயசேகர ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அல்லர். அவர் வேறு கட்சியை சார்ந்தவர். கடந்த பொதுத் தேர்தலில் எமது கட்சியுடன் இணைந்து போட்டியிட்டார். அவருக்கு எமது கட்சியில் உப தலைவர் பதவி வழங்குவது பற்றி கட்சிக்குள் கலந்துரையாடப்படவில்லை. யோசனையும் முன்வைக்கப்படவில்லை. கட்சியின் செயற்குழுவும் இது பற்றி அவதானம் செலுத்தப்படவில்லை."-என்றார். (அ)

# குருநாகல் பாடசாலையில் 30 பாம்பு குட்டிகள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 23

குருநாகல் மாவட்டத்தில் போகமுவ மத்திய மகா வித்தியாலயத்தில், ஆரம்பப் பிரிவில் உள்ள வெளிப்புற வகுப்பறையில் இருந்து 30 பாம்புக்குட்டிகள், மூன்று பெரிய பாம்புகள் மற்றும் 55 பாம்பு முட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் பாம்புகள் தென்படுவதாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு அறிவித்தனர்.

இதனை தொடர்ந்து, கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி அன்று கடமைகளைப் பொறுப்பேற்ற அதிபர் தலைமையில் சோதனை செய்யப்பட்டதில் 30 பாம்புக் குட்டிகள், மூன்று பெரிய பாம்புகள் மற்றும் 55 பாம்பு முட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

போகமுவ மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 1 முதல் 13 வரை சுமார் 2,000 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதில், 153 மாணவர்கள் ஆரம்ப பிரிவில் உள்ளனர்.

பாடசாலை நிர்வாகம் விரைவாக நடவடிக்கை எடுத்தமையினால் பிள்ளைகள் மற்றும் ஊழியர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

# கனடிய பெண் கைது!

கொழும்பு, ஜூலை 23

181 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய போதைப்பொருளுடன் கனடிய பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின், மொன்ட்ரியலிலிருந்து டோஹா வழியாக வந்த கனேடிய பெண் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரின் பொருட்களிலிருந்து 18,123 கிராம் ஹஷிஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணையை இலங்கை சுங்க திணைக்களத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (அ)

# கம்மன்பிலவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 23

போலி அதிகார பத்திர உரிமம் ஒன்றை தயாரித்து அவுஸ்திரேலிய வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான 20 மில்லியன் ரூபா மதிப்புள்ள நிறுவனத்தை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறி முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்காக கொழும்பு மேல் நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ். சப்புவித முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, வழக்கை நவம்பர் 21 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதி உத்தரவிட்டார்.

முந்தைய நல்லாட்சி அரசாங்க காலத்தின் போது, அவுஸ்திரேலிய வர்த்தகர் பிரையன் ஷாடிக் என்பவருக்குச் சொந்தமான 20 மில்லியன் ரூபா மதிப்புள்ள நிறுவனப் பங்குகளை போலி அதிகார பத்திர உரிமம் தயாரித்து முறைகேடாகப் பயன்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மீது இந்த வழக்கு தொடரப்பட்டது. (அ)

# ஆண்களைவிட பெண்கள் இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் ஆண் மக்கள்தொகை குறைவது எதிர்காலத்தில் பல நெருக்கடிகளை உருவாக்கக் கூடும் என்று வடமேற்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அமிந்த மெத்சில் தெரிவித்தனர்.

1995 ஆம் ஆண்டில் 100 பெண்களுக்கு 100.2 ஆண்கள் இருந்த நிலையில், தற்போது அது 100 பெண்களுக்கு 93.7 ஆண்களாகக் குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பெண்களின் ஆயுட்காலம் அதிகரிப்பு, பெண்களின் பிறப்பு வீதம் உயர்வு, மற்றும் இளம் ஆண்களின் வெளிநாட்டு இடம் பெயர்வு ஆகியவை இந்த மாற்றத்துக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளதாக பேரா சிரியர் அமிந்த மெத்சில் கூறினார். (அ)

# பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்புக்கு ரூ.276 மில்லியன்

கொழும்பு, ஜூலை 23

பெருந்தோட்ட மக்களுக்கான வீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக, இந்த வருடம் 276 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை - வாத்துவ பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க இந்த விடயத்தை கூறினார்.

பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பு திட்டத்தை முன்னெடுப்பதற்காக, இந்திய நிதியுதவி கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 854 குடும்பங்களுக்கான வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

2023 ஆம் ஆண்டு தரவுகளுக்கு அமைய, நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் குடும்பங்கள் வீடு இன்றி வாழ்வதாக அமைச்சர் கூறினார்.

அந்தவகையில், வீடுகள் அற்றவர்களை உரியவாறு அடையாளம் கண்டு, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதே அரசாங்கத்தின் இலக்கு என நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# பாடசாலை நேரம் நீடிப்பு?

கொழும்பு, ஜூலை 23

புதிய கல்வி சீர்திருத்தங்களின் கீழ் பாடசாலை நேரம் முப்பது நிமிடங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஊடக நேர்காணலின்போது பேசிய பிரதமர் அமரசூரிய, ஒரு பாடத்தின் காலம் 45 நிமிடங்களாக நீடிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

"பாடம் அல்லது பாடப்பகுதிகள் அவசரமின்றி கற்பிக்கப்படுவதை உறுதி செய்வதே இதன் நோக்கம். குழு ஆராய்ச்சி மற்றும் விளக்கக்காட்சிகள் போன்ற பல நடைமுறை செயல்பாடுகளை நாங்கள் சேர்த்துள்ளோம். மாணவர்களுக்கு கற்பிக்க ஆசிரியருக்கு போதுமான நேரம் இருக்க வேண்டும், அதே நேரத்தில் மாணவர்கள் அவசரமின்றி இந்த நடவடிக்கைகளில் பங்கேற்க நேரம் தேவை," என்று அவர் விளக்கினார்.

ஆரம்பத்தில் காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை பாடசாலைகளை இயக்க முன்மொழியப்பட்டதாக வெளிப்படுத்திய பிரதமர் அமரசூரிய, இருப்பினும், பாடசாலை நேரத்தை அரை மணி நேரம் மட்டுமே நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

# நாட்டில் இதுவரையில் 72 துப்பாக்கிச் சூடுகள்

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 72 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 38 பேர் கொல்லப்பட்டதுடன், 41 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், 72 ஆவது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்றுமுன் தினம் சீதுவையில் பதிவாகியுள்ளது.

அதற்கமைய, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் கட்டுநாயக்க - சீதுவை நகர சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவரின் தந்தை எனத் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக ராகம போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர், 54 வயதுடைய ஒய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர் என பொலிஸார் கூறினர்.

அடையாளம் தெரியாத இருவரினால் நேற்று முன் தினம் இரவு இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது வியாபாரங்களுக்காகவே கடந்த அரசுகள் நாட்டில் ஆட்சி!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜூலை 23

**கடந்த அரசாங்கத்தினர் தமது வியாபாரங்களுக்காக மாத்திரமே ஆட்சி செய்தனர் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**



களுத்துறையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-களுத்துறை மாவட்டத்தில் உள்ள 10 முதல் 12 சதவீதமானோர் வீடுகளின்றியே வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வாறான மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள விசேட நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமை 155 குடும்பங்களுக்கு வீட்டு நிர்மாணத் திட்டத்துக்கான நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

இதற்காக 155 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 42 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிவாரணத் தொகையைக் கொண்டு அம்மக்கள் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொள்ள முடியும்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள பெருந்தோட்டப் பகுதிகளை சேர்ந்த 4 ஆயிரம் குடும்பங்களின் இருப்பிடங்கள் தொடர்பான சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வுக்காண வேண்டியுள்ளது.

அரச ஊழியர்களுக்காக தொடர்மாடிக் குடியிருப்புகளை அமைத்துக் கொடுக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தடைக்கல்லாக உள்ள சுமைகளை குறைப்பது அவசியம்.

சமீப நாட்களாக சட்டத்திற்கு புறம்பாக வாகனங்களை வைத்திருப்பவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதில் யார் தொடர்புப்பட்டுள்ளார்கள்? கடந்த அரசாங்கத்திலிருந்த அமைச்சர் ஒருவர் எதிர்க்கட்சியிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வாகனம் ஒன்றை விற்பனை செய்துள்ளார்.

இருவரும் பிரதான இரு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். முன்னரே இவ்வாறான ஊழல் தொடர்பில் ஏன் வெளிப்படுத்தப்படவில்லை என கேட்க வேண்டாம்.

அவர்கள் ஆட்சியில் இருந்தமையால் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காது இரகசியமாக சட்டத்துக்குப் புறம்பாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட வாகன கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தினர் தமது வியாபாரங்களுக்காக மாத்திரமே ஆட்சி செய்தனர்.

எனினும் நாம் மக்களுக்காக செயல்படும் அரசாங்கம்.

அதற்காகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து உள்ளோம்-என்றார். (அ)

# நாணய நிதியத்தில் இருந்து வெளியேறும் கீதா கோபிநாத்!

கொழும்பு, ஜூலை 23

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் நிலைத் தலைவராக இருக்கும் கீதா கோபிநாத் எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதியில் தனது பதவியை விட்டு விலகி ஹார்வர்ட் பல்கலைக்கழகத்துக்குத் திரும்புவார் என்று நாணய நிதியம் தெரிவித்துள்ளது.



திருமதி கோபிநாத் 2019 ஜனவரியில் தலைமைப் பொருளாதார நிபுணராக நாணய நிதியத்தில் சேர்ந்தார். அந்தப் பொறுப்பில் பணியாற்றிய முதல் பெண்மணி ஆவார்.

மேலும், 2022 ஜனவரி முதல் துணை நிர்வாக பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார்.

அதேநேரம், அவர் ஒரு இந்திய வம்சாவளி அமெரிக்க குடிமகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஹார்வர்டை விட்டு நாணய நிதியத்தில் சேர்ந்த கோபிநாத், பொருளாதாரப் பேராசிரியராக மீண்டும் பல்கலைக்கழகத்துக்கு திரும்புவார்.

அவரது பதவி விலகல், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலகப் பொருளாதாரத்தை மறுசீரமைக்கவும், கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலிருந்தும் இறக்கும திகள் மீதான அதிக வரிகளுடன் நீண்டகால அமெரிக்க வர்த்தகப் பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டுவரவும் முயன்று வரும் நேரத்தில் வாஷிங்டன் திறைசேரிக்கு ஒரு வாய்ப்பை வழங்கும்.

இந்த நிலையில் அவரது பதவி விலகல் தொடர்பான அறிவிப்பினை திங்களன்று வெளியிட்ட நாணய நிதிய முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா,

கீதா ஒரு சிறந்த சக ஊழியராக இருந்து வருகிறார்-ஒரு விதிவிலக்கான அறிவுசார் தலைவர், நிதியத்தின் நோக்கம் மற்றும் உறுப்பினர்களுக்கு அர்ப்பணிப்புடன், ஒரு அற்புதமான முகாமையாளர், எங்கள் ஊழியர்களின் தொழில்முறை நிலை மற்றும் நல்வாழ்வில் எப்போதும் உண்மையான அக்கறை காட்டுகிறார்-என்றார். (அ)

# இந்த ஆண்டில் 57 திட்டங்களுக்கு இலங்கை முதலீட்டு சபை அனுமதி

கொழும்பு, ஜூலை 23

இந்த ஆண்டு 57 திட்டங்களுக்கு இலங்கை முதலீட்டு சபை ஒப்புதல் அளித்துள்ளதாக கைத்தொழில் மற்றும் வணிக அபிவிருத்தி பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.



இந்தத் திட்டங்களின் மொத்த மதிப்பு 569 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும், இதில் 507 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்கனவே நாட்டில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 101 சதவீதம் அதிகரிப்பு என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பணவீக்கம் குறைந்தது

கொழும்பு, ஜூலை 23

ஜூன் மாதத்தில் பணவீக்கம் சற்று குறைவடந்துள்ளதாக மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதத்தில் 0.6 சதவீதமாக இருந்த பணவீக்கம் ஜூன் மாதத்தில் 0.3 சதவீதமாகக் குறைவடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதத்தில் 5.9 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கமும் ஜூன் மாதத்தில் 4.2 சதவீதமாகக் குறைவடந்துள்ளது.

இதேவேளை, அமெரிக்க வரிகள் தொடர்பாக அரசாங்கம் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

# சர்வதேசத்தின் நடவடிக்கைகளைப் புரியும் தலைவர்களே நாட்டை நிர்வகிக்கவேண்டும்

## வஜிர அபேவர்தன கருத்து

கொழும்பு, ஜூலை 23

சர்வதேசத்தின் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள முடியுமான அரச தலைவர்கள் நாட்டை நிர்வகிப்பது முக்கியம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியால் அதிகரிக்கப்பட்டுள்ள தீர்வை வரி அதிகரிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்து அமெரிக்காவின் எம்.சி.சி திட்டத்தை நாட்டுக்கு கொண்டுவந்து அதன் மூலம் 415 பில்லியன் டொலரை நன்கொடையாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துவந்தார்.

இந்த திட்டத்தை செயற்படுத்த நாட்டு மக்கள் அன்று இடமளித்திருந்தால், ஆசியாவிலே வரி நிவாரணம் கிடைக்கும் முதலாவது நாடாக இலங்கை தெரிவாகி இருக்கும்.

அமெரிக்காவின் தீர்வை வரி அதிகரிப்பும் எமக்கு பிரச்னையாகி இருக்காது.

அமெரிக்க ஜனாதிபதியினால் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வரி தொடர்பில் இலங்கை மக்கள் மிகவும் புரிதலுடன் செயற்பட வேண்டும்.

இந்த எச்சரிக்கை தொடர்பில் ரணில் விக்ரமசிங்க தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார்.

அதனால்தான் அவர் 2015 ஆட்சி காலத்தின் போதும் அதற்குப் பிறகும் மில்லேனியம் சலஞ்ச் கார்ப்பரேஷன் திட்டத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்த முயன்றார்.

எனது நினைவின் பிரகாரம், அமெரிக்காவிலிருந்து 415 பில்லியன் டொலெரை நன்கொடையாக பெற்றுக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துவந்தார்.

அந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் இருந்த பல்வேறு குழுக்கள் செயற்பட்ட விதம் தொடர்பில் இலங்கை மக்கள் மீள நினைத்துப்பார்க்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் செயற்பட்ட சந்தர்ப்பத்தில், இந்த விடயத்தை செயற்படுத்த நாட்டு மக்கள் இடமளித்திருந்தால், ஆசியாவிலே வரி நிவாரணம் கிடைக்கும் முதலாவது நாடாக இலங்கை தெரிவாகி இருக்கும்.

அமெரிக்காவின் வரி விதிப்பு, நூற்றுக்கு 44 வீதத்தில் இருந்து 30 வீதம் வரை குறைந்திருப்பதாக பலரும் தெரிவிக்கின்றனர்.

இது வெட்கப்பட வேண்டிய விடயம் என்றே நான் தெரிவிக்கிறேன்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நேர காலத்துடன் சர்வதேசத்தின் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள முடியுமான அரச தலைவர்கள் நாட்டை நிர்வகிப்பது முக்கியமாகும்.

இப்போது நாங்கள் எதை பேசினாலும் பிரயோசனம் இல்லை.

ஏனெனில் அமெரிக்கா இலங்கைக்கு எம்.சீ.சீ ஊடாக நன்கொடை வழங்கும்போது இலங்கை எவ்வாறு செயற்பட்டது என டொனல்ட் ட்ரம்புக்கு தெரியும்-என்றார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் முன்பே அறிந்திருந்தாரா?

## விசாரணை நடத்த கோருகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூலை 23

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் எனில் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, தகவல்களை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சஹ்ரான் மற்றும் நௌபர் மௌலவி ஆகியோரே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள். இவர்களில் சஹ்ரான் இறந் துவிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின்போது ஷானி அபேசேகர சேவையில் இருந்தார்.

தற்போது அவருக்கு மீண்டும் பதவி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, [illegible] பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்கின்றார்கள் எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.

அவ்வாறு பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்க முடியாமல்போனால், தம்மால் போலியான கருத்தே சமூகமயப்படுத்தப்பட்டது என்பதை மக்கள் முன்னிலையில் அரசு தெரிவிக்க வேண்டும்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்ப வத்துடன் பிள்ளையானுக்குத் தொடர்பு இல்லை என்றே கூறப்படுகின்றது.

சிலவேளை அவருக்குத் தெரிந்திருந்தால் அது பற்றி விசாரணை செய்யலாம். முழு அதிகாரமும் தற்போது அரசு வசம் உள்ளது-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன மக்களுக்கு ஆதரவான பிரேரணைக்கு சபை அங்கீகாரம்

கல்முனை, ஜூலை 23

**பலஸ்தீன மக்களுக்கு ஆதரவான பிரேரணைக்கு சபையில் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முதலாவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது பலஸ்தீன மக்களுக்கு ஆதரவான அவசர பிரேரணையை பிரதித் தவிசாளர் பாறுக் நஜீத் சமர்ப்பித்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பில் பல உறுப்பினர்களும் உரையாற்றியதுடன் ஏகமனதாக தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

இப்பிரேரணையில் உள்ள தாவது,

"1948 ஆம் ஆண்டு முதல் சட்டவிரோத இஸ்ரேலிய அரசினால் பலஸ்தீன மக்கள் தங்களது சொந்த நிலம், அடையாளம் மற்றும் சுயராஜ்ஜியத்தை இழந்து, தொடர் துன்பங்களுக்குள்ளாகி வருகின்றனர். ஏராளமான குடும்பங்கள் அகதிகளாக மாற்றப்பட்டு, பலஸ்தீனத் தீவிர முறைகள், இடம்பெயர்வுகள் மற்றும் கட்டாயக் குடியேற்றங்களின் மூலம் அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் ஒழுக்கமின்றி மீறப்பட்டு வருகின்றன."

அண்மைக்காலமாக, பலஸ்தீனத்தில், குறிப்பாக காஸா மற்றும் வெஸ்ட் பாங்க் பகுதிகளில் இடம்பெறும் வன்முறை நடவடிக்கைகள் பல இலட்சம் மக்கள், சிறுவர்களின் உயிரைப் பறித்தன. அப்பாவி மக்கள், சிறுவர்கள் பாடசாலைகளில், மருத்துவமனைகளில் மற்றும் குடியிருப்புகளில் கூட பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது அனைத்தும் ஐ.நா. மனித உரிமைச் சட்டங்களுக்கு முற்றிலும் எதிரானவை.

பொது மக்கள், சிறுவர்கள் எந்தவொரு போரிலும் இலக்காகக் கருதப்படக் கூடாது. அவர்களின் பாதுகாப்பு என்பது உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு அரசின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

சட்ட விரோத இஸ்ரேல் அரசின் தாக்குதல்களால் பாதிக்கப்படும் பலஸ்தீன மக்களின் நிலைமைகள் குறித்து இப்பிரதேச சபை ஆழ்ந்த கவலையுடன் தனது கருத்தை வெளியிடுகிறது.

எனவே, இப்பிரேரணை மூலம் இப்பிரதேச சபைக்கு நான்கு முன்மொழிவுகளை பாலஸ்தீன மக்களுக்கும் சிறுவர்களுக்கும் எமது முழுமையான ஆதரவை தெரிவித்துக் சமர்ப்பிக்கிறோம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# திருக்கோவில் மருத்துவமனையில் இயன் மருத்துவப் பிரிவு திறப்பு

திருக்கோவில், ஜூலை 23

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் ஆதார மருத்துவமனையில் இயன் மருத்துவப்பிரிவு திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமாரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தவிசாளரின் நிதிப்பங்களிப்புடன் மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகரின் பீ. மதூத் மேற்பார்வையில் குறித்த இயன் மருத்துவப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இதன்போது உரையாற்றிய தவிசாளர், வைத்திய அத்தியட்சகரின் இந்த செயல்பாடு சிறந்த நிர்வாகத்துக்கான முன்னுதாரணம் எனவும் விரைவாக மருத்துவமனை அபிவிருத்திக்காக இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீடாக சுமார் 3 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளிகளையும் சந்தித்த தவிசாளர், அவர்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

திருக்கோவில் ஆதார மருத்துவமனை வைத்திய அத்தியட்சகர் மதூத், இயன் மருத்துவர் கணபதிப்பிள்ளை கரன்ராஜ் மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக் குழு, தாதிய உத்தியோகத்தர்கள், சமூகநலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர். (எ)

# ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைக்கு தீர்வு வேண்டும்

திருகோணமலை, ஜூலை 23

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கல்விசார் ஊழியர்கள் சங்கத்தினர் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கல்விசார் ஊழியர் சங்கத்தின் தேசிய மற்றும் மாவட்ட மட்ட நிர்வாகிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். குணநாதன் ஆகியோரை திருகோணமலையில் வைத்து சந்தித்தனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள், தேவைகள் தொடர்பில் கலந்துரையாடியதாகவும் குறிப்பாக ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக இடம்பெறுகின்ற பல்வேறு சிக்கல்கள் தொடர்பாகவும் தேசிய இடமாற்றக் கொள்கைக்கு மாறாக இடம்பெறுகின்ற செயல்பாடுகள் தொடர்பாகவும் குறித்த கலந்துரையாடலில் கலந்துரையாடி இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன் தேசிய ரீதியாக செயல்படுகின்ற தங்கள் சங்கத்தை கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்வதற்காகவும் அதற்கான செயல்திட்டத்தை முன் மொழிவதற்காகவும் இருவரையும் சந்தித்து சில விடயங்களை கலந்துரையாடியுள்ளதாகவும் அது தொடர்பான முன்மொழிவு ஒன்றை செயலாளர் கோரியுள்ளதாகவும் அதையும் எதிர்வரும் காலங்களில் வழங்குவதன் ஊடாக கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற கல்வி சார்ந்த குறிப்பாக ஆசிரியர்கள் சார்ந்த நலன்களில் தொழில்படுவதற்கு தங்களுடைய சங்கம் உறுதுணையாக இருக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் தேசிய மட்ட நிர்வாகிகளான பொருளாளர் அஜித் விஜயதுங்க, நிறைவேற்றுக்குழு உறுப்பினரான ரங்க பண்டாரநாயக்க, மாவட்ட நிர்வாகிகளான எஸ். வரதராஜன், எம். லாபீர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (எ)

# மட்டு. மருத்துவமனைக்கு புதிய எம்.ஆர்.ஐ. இயந்திரம்

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் புதிய எம்.ஆர். ஐ. இயந்திரத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான மருத்துவமனையான மட்டக்களப்பு போதனா மருத்துவமனையை சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆய்வு செய்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளையும் முறையான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்து, மாவட்டத்தில் வசிக்கும் 5 இலட்சத்து 89,172 மக்களுக்கும் சுற்றியுள்ள மாவட்ட மக்களுக்கும் சிறந்த மற்றும் வினைத்திறனான சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதாரத் துறைத் தலைவர்களுடனான சிறப்புக் கலந்துரையாடலுடன் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. கணேசலிங்கம், துணை இயக்குநர்கள் மைதிலி, கே. மோகனகுமார், மருத்துவமனை ஊழியர்கள் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு, அறுவை சிகிச்சை விடுதிகள், அறுவை சிகிச்சை அறைகள், உள்நோயாளி சிகிச்சை விடுதிகள், அவசர சிகிச்சை பிரிவு, மருத்துவமனையின் பிற சிகிச்சை பகுதிகள், அத்துடன் மருத்துவமனையின் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அந்தத் திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால செயல்பாடுகள் ஆகியவற்றை சுகாதார அமைச்சர் ஆய்வு செய்தார். உள்நோயாளிகளின் நல்வாழ்வு குறித்து விசாரிக்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்தார்.

இந்த ஆய்வின் போது, மருத்துவமனை இயக்குநர் மற்றும் பிற அதிகாரிகளுக்கும் நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் பிற மருத்துவமனை ஊழியர்கள் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர்களுக்கும் மேற்கூறிய மருத்துவமனையால் வழங்கப்படும் நோயாளி சிகிச்சை சேவைகள் மற்றும் சுகாதார சேவைகளை மேலும் திறம்படச் செய்ய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இந்த ஆய்வின் போது, தற்போதைய பிரச்னைகள் குறித்து ஊழியர்கள் கருத்துக்களை முன்வைக்க வாய்ப்புகளை வழங்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்தார்.

கிழக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் நோக்கில், பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்ட மிகக் குறுகிய காலத்துக்குள் போதனா மருத்துவமனையின் சிகிச்சை சேவையை வலுப்படுத்துதல் மற்றும் சேவைகளை நெறிப்படுத்துவதற்கான வழிமுறைகளை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு பயணம் நிபுணர்கள், மருத்துவர்கள், உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர்களால் பாராட்டப்பட்டது.

இந்தக் கண்காணிப்பைத் தொடர்ந்து, சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து மருத்துவமனை நிர்வாக அதிகாரி மற்றும் ஊழியர்களுடன் நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டார். (எ)





# "இறைவனை எல்லா உயிர்களிலும் காணவேண்டும்"

மட்டக்களப்பு, ஜூலை 23

இறைவனை எல்லா உயிர்களிலும் காண வேண்டும், எல்லா உயிர்களும் இறைவனைக் காண வேண்டும். இந்த இரண்டும் இருப்பது ஒரு சமயத்தினுடைய முழுமையாகும் என மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜி. மஹராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலய "கடம்பன் மாலை" பாடல் இறுவெட்டு வெளியீட்டு நேற்று முன்தினம் தாந்தாமலை முருகன் ஆலய சந்நிதானத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார். (எ)

# ஐஸ் போதைப்பொருள் விற்ற 22 வயது இளைஞன் கைது

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள புதிய எல்லை வீதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட 22 வயது இளைஞன் 2 கிராம் 170 மில்லிக் கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை சீலாமுனை பகுதியில் வைத்து 210, 140, 180 மில்லிக் கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 3 இளைஞர்களை கைது செய்தனர்.

இவர்களை 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி பெற்று இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த போதைப்பொருள் வியாபாரி தொடர்பில் தகவல்களை வழங்கினர்.

இதனையடுத்து பொலிஸ் போதை தடுப்பு - ஊழல் ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மாறுவேடத்தில் புதிய எல்லை வீதியில் சம்பவதினமான இரவு கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது அங்கு வியாபாரத்துக்காக ஐஸ் போதைப்பொருளை எடுத்து வந்த இளைஞனை கண்ட பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்து 2 கிராம் 100 மில்லிக் கிராம் ஐஸ் போதைப் பொருளை கைப்பற்றினர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பங்களாதேஷில்

# விமானம் விழுந்து நொறுங்கியது மாணவர்கள் உட்பட 19 பேர் பலி!



டாக்கா, ஜூலை 23

**பங்களாதேஷ் விமானப்படை விமானம் டாக்கா நகரில் உள்ள பாடசாலை வளாகத்தில் விழுந்து நொறுங்கியதில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 19 பேர் பரிதாபமாக பலியாகினர்.**

விமானப்படைக்குச் சொந்தமான எப்-7பிஜிஐ (சீன தயாரிப்பு) ரக பயிற்சி விமானம் டாக்கா நகரிலிருந்து நேற்று முன்தினம் மதியம் 01.06 மணிக்கு புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்தில், உட்டாரா என்ற இடத்தில் உள்ள பாடசாலை வளாகம் மற்றும் கல்லூரி வளாகத்தில் விழுந்தது. அந்த விமானம் பயங்கர சத்தத்துடன் வெடித்து தீப்பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில் 16 மாணவர்கள், 2 ஆசிரியர்கள் மற்றும் மொத்தம் 19 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 100இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு பங்களாதேஷ் இடைக்கால தலைவர் முகமது யூனுஸ் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். (எ)

# மக்களவையில் பேசுவதற்கு என்னை அனுமதிக்கவில்லை

### ராகுல் காந்தி குற்றச்சாட்டு




புதுடில்லி, ஜூலை 23

இந்திய பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் பஹல்காம் தாக்குதல், ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. சபாநாயகர் இதை ஏற்க மறுத்ததால் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து அவை ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் முன்னாள் தலைவருமான ராகுல் காந்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது: மக்களவையில் ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பா.ஜ.க. உறுப்பினர்கள் பேச அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் இது குறித்து தனது கருத்தை சொல்ல முற்பட்டால் அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

மக்களவையில் பேச எனக்கு உரிமை உள்ளது. ஆனால், ஒரு போதும் நான் பேசுவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. என்னைப் பேச அனுமதித்தால் விவாதம் நடக்கும். ஆட்சியாளர்கள் ஏதாவது சொன்னால் அதுகுறித்து பேச எதிர்க்கட்சியினருக்கும் அனுமதி தரவேண்டும். ஆனால் அனுமதி தரப்படுவதில்லை. 2 வார்த்தைகள் பேச விரும்புகிறோம். ஆனால் அனுமதி மறுக்கப்படுகிறது- என்றார். (எ)

# ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் ஈரான் ஆலோசகர் சந்திப்பு



மொஸ்கோ, ஜூலை 23

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் ஈரான் உச்ச தலைவரின் ஆலோசகர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்து வரும் அமெரிக்கா கடந்த 22ஆம் திகதி ஈரான் மீது கடும் தாக்குதலில் ஈடுபட்டது. அங்குள்ள அணு உலைகளை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த மோதலுக்கு மத்தியில் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராசி, ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து பேசினார். அப்போது புடின் ஈரானுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்டார். இந்த நிலையில் ஒரு மாதத்துக்கு பிறகு ஈரானின் உச்ச தலைவர் ஐயத்துல்லா அலி கமெனியின் சிரேஷ்ட ஆலோசகர் அலிலரி ஜானி, மொஸ்கோ சென்று புடினை சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது மேற்கு ஆசியாவில் நிலவும் மோசமான நிலைமை குறித்தும் ஈரானின் அணு சக்தித் திட்டத்தின் பிரச்னைகள் குறித்தும் விவாதித்தனர். இஸ்ரேல் - ஈரான் மோதலை தணிக்க ஆதரவு அளிப்பதாக புடின் உறுதியளித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இந்தியா-பாகிஸ்தான் போரைபோல பல போர்களை நிறுத்தியவர் ட்ரம்ப்

### வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் கரோலின்




வாஷிங்டன், ஜூலை 23

இந்தியா - பாகிஸ்தான் போரை போல பல போர்களை நிறுத்தியவர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் என்று வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் கரோலின் லீவிட் தெரிவித்தார்.

இந்தியாவின் ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் கொடூரத் தாக்குதல் நடத்தினர். இதில், நேபாள நாட்டைச் சேர்ந்த ஒருவர் உட்பட சுற்றுலாவுக்காக சென்ற பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இதன் பின்னணியில் பாகிஸ்தானை சேர்ந்த, தடை செய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத இயக்கத்துடன் இணைந்த ரெசிஸ்டண்ட் பிரண்ட் என்ற பயங்கரவாத அமைப்புக்கு உள்ள தொடர்பு தெரிய வந்தது.

இதற்குப் பதிலடியாக, இரு வாரங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மீது ஒப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டது. 9 பயங்கரவாத உட்கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியது.

இதனால், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்ற சூழல் உருவானது. நான்கு நாட்களுக்கு பின்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த முடிவுக்கு வந்தன. பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவது இந்தியாவின் நோக்கமல்ல என மத்திய அரசு கூறியது. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட்டது எனத் தெரிவித்தது.

ஆனால், அமெரிக்காவின் தலையீட்டாலேயே இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நடைபெறாமல் முடிவுக்கு வந்தது என அந்த நாட்டு ஜனாதிபதி ட்ரம்ப் கூறினார். இது சர்ச்சையை ஏற்படுத்தியது. எனினும், இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் இராணுவ மட்டத்திலான பேச்சுவார்த்தையின் முடிவாகவே போர் நிறுத்தம் ஏற்பட்டது என இந்தியா கூறியது. 3ஆம் நாட்டின் தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் மத்திய அரசு கூறிவருகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் கரோலின் லீவிட் செய்தியாளர்களிடம் கூறும்போது, உலக அரங்கில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் என்னென்ன விசயங்களை செய்துள்ளார் என பாருங்கள்.

இந்தியா - பாகிஸ்தான் போரை போல பல போர்களை நிறுத்தியவர் அவர். ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரை நிறுத்த தீவிரத்துடன் அவர் பணியாற்றி வருகிறார் என கூறியுள்ளார்.

ஈரான் மற்றும் மத்திய கிழக்கு பகுதியில் ட்ரம்பின் நடவடிக்கைகளையும் அவர் சுட்டிக் காட்டி பேசினார். ஈரானின் அணு ஆலைகளை முற்றிலும் தகர்த்துள்ளார். இஸ்ரேல் மற்றும் காஸா இடையே போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார் எனக் கூறினார். (எ)

# பா.ஜ.கவினர் செய்வது மொழி பயங்கரவாதம்

கொல்கத்தா, ஜூலை 23

வங்க மொழிக்கு எதிராக பா.ஜ.க. மொழி பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுவதாக மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியாவின் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தியாகிகள் தின பேரணியில் உரையாற்றிய மம்தா பானர்ஜி, "வங்க மொழிக்கு எதிராக பா.ஜ.க. மொழி பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகிறது. அந்தக் கட்சி, மேற்கு வங்கத்தின் அடையாளம், மொழி, கலாசாரம், பெருமை ஆகியவற்றை அழிக்கத் துடிக்கிறது. வங்க மொழிக்கு எதிரான மொழி பயங்கரவாதத்தை பா.ஜ.க. நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், இங்கு தொடங்கப்படும் எதிர்ப்பு இயக்கம் புதுடில்லி வரை செல்லும்.

வங்காளிகள், வங்க மொழி ஆகியவற்றின் மீதான தாக்குதலுக்கு எதிரான இயக்கம் ஜூலை 27 ஆம் திகதி தொடங்கப்படுகிறது. இது ஒரு வெகுஜன எதிர்ப்பு பிரசாரமாக மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வார இறுதியிலும் மேற்கு வங்கம் முழுவதும் பேரணிகள் நடத்தப்படும். வரக்கூடிய 2026 மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் நாம் கடந்த முறை பெற்றதைவிட அதிக இடங்களில் வெற்றி பெற வேண்டும். இதன் பிறகு, பா.ஜ.கவை தோற்கடிக்க புதுடில்லிக்கு அணிவகுத்துச் செல்ல வேண்டும்."- என்றார். (எ)

# ரஷ்யாவில் கோர விபத்து; 19 தொழிலாளர்கள் பலி!

மொஸ்கோ, ஜூலை 23

ரஷ்யாவில் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி 19 தொழிலாளர்கள் பலியாகினர்.

ரஷ்யாவின் கிழக்கே யகுதியா பகுதியில் சுரங்க தொழிலாளர்கள் சிலரை ஏற்றிக் கொண்டு நேற்று பஸ் ஒன்று சென்றது. அப்போது, சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த அந்த பஸ், வீதியிலிருந்து விலகி ஓடியது. இதனால் பஸ், 80 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர் என உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விபத்து, டெனிசோவ்ஸ்கி சுரங்கம் மற்றும் பதப்படுத்தும் ஆலை அமைந்த வீதியில் நடந்துள்ளது. இந்த ஆலையில் நிலக்கரி பதப்படுத்தும் பணி நடந்து வருகிறது.

ரஷ்யாவில் இதுபோன்ற தொழிற்சாலை சார்ந்த விபத்துகள் இடம்பெறுவது அதிகரித்து வருகிறது. பாதுகாப்பு குறைபாடுகளால் இதுபோன்ற விபத்துகள் நடக்கின்றன என விசாரணை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா- இங்கிலாந்து இடையே 4ஆவது டெஸ்ட் போட்டி இன்று

மான்செஸ்டர், ஜூலை 23

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் இன்று தொடங்க வுள்ளது.


இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பய ணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1-2 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் மோதும் 4ஆவது போட்டி இன்று மான்செஸ் டரில் தொடங்கவுள்ளது.

எஞ்சியுள்ள 2 போட்டிகளில் ஒன்றில் வெற்றி பெற் றாலே இங்கிலாந்து தொடரை கைப்பற்றி விடும். இதே வேளை எஞ்சியுள்ள 2 போட்டிகளில் வெற்றி பெற்றால் மட்டுமே இந்திய அணியால் தொடரை வெல்ல முடியும். இதனால் இந்த 4ஆவது போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது.

இதனிடையே 4ஆவது போட்டி மழையால் பாதிக்கப் பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. போட்டி நடைபெறும் முதல் நாளில் மழை பெய்ய 60 சதவீதம்



வாய்ப்புள்ளதாக வானிலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அத்துடன் போட்டி நடைபெறும் 5 நாட்களும் மழைக்கு வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. (எ)



## வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ்: மரிய சக்காரி முன்னேற்றம்

வாஷிங்டன், ஜூலை 23

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரில் மரிய சக் காரி 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் கிரீஸ் நாட்டின் மரிய சக்காரி, இங்கிலாந்தின் கேட்டி போல் டர் உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பாக செயல்பட்ட சக் காரி 6 - 3 மற்றும் 6 - 4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார். (எ)

## இங்கிலாந்து தொடரிலிருந்து நிதிஷ் குமார் ரெட்டி விலகல்



மான்செஸ்டர், ஜூலை 23

இந்திய கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் நிதிஷ் குமார் ரெட்டி முழங்கால் காயம் காரணமாக இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலகியுள் ளார்.

சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரு கிறது. இரு அணிகள் இடையிலான 5 டெஸ்ட் போட்டி கள் கொண்ட தொடரில் இந்திய அணி 1-2 என பின்தங் கியுள்ளது. 4ஆவது டெஸ்ட் போட்டி இன்று மான்செஸ் டர் நகரில் தொடங்கவுள்ளது. இந்த நிலையில் இந்திய அணியின் நிதிஷ் குமார் ரெட்டி உடற் பயிற்சி செய்து கொண்டிருந்த போது காயமடைந்தார். இதைத் தொடர்ந்து அவர், எஞ்சியுள்ள 2 டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் விலகியுள்ளார்.

இதுதொடர்பில் பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள அறிக் கையில், "இடது முழங்கால் காயம் காரணமாக மீதமுள்ள 2 டெஸ்ட் போட்டிகளிலிருந்து நிதிஷ் குமார் ரெட்டி வில கியுள்ளார். அவர், உடனடியாக இந்தியா திரும்புவார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நியூசிலாந்துடன் டெஸ்ட்: சிம்பாவே அணி அறிவிப்பு

புலவாயோ, ஜூலை 23

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற் கும் சிம்பாவே அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணி கள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதனையடுத்து 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் ஒகஸ்ட் 7ஆம் திகதி தொடங்க வுள்ளது. 2 போட்டிகளும் புலவாயோவில் நடைபெற வுள்ளன.

இந்த போட்டிக்கான சிம்பாவே அணி அறிவிக்கப் பட்டுள்ளது. கிரேக் எர்வின் தலைமையிலான அந்த அணி யில் சிக்கந்தர் ராசா, பிரையன் பென்னட், பிளஸ்சிங் முச ரபானி போன்ற திறமையான வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

சிம்பாவே அணி விவரம் பின்வருமாறு:- கிரேக் எர் வின் (தலைவர்), பிரையன் பென்னட், தனகா சிவாங்கா, பென் கர்ரன், ட்ரெவர் குவாண்டு, ராய் கையா, தனு னுர்வா மகோனி, கிளைவ் மடாண்டே, வின்சென்ட் மசெ கேசா, வெலிங்டன் மசகட்ஸா, பிளஸ்ஸிங் முசரபானி, நியூமன் நியாம்ஹூரி, சிக்கந்தர் ராசா, தபத்ஸ்வா சிகா, நிக்கோலஸ் வெல்ச், சீன் வில்லியம்ஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (எ)

## வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ்: லியார்னர் டீன் அபார வெற்றி

வாஷிங்டன், ஜூலை 23

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரில் லியார்னர் டீன் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரி வில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் லியார்னர்ட் டீன், சக நாட்டவரான எமிலியோ நவா உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய லியார்னர் டீன் 6-1, 6-4 என்ற நேர் செற் கணக்கில் அமிலியோ நவாவை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)




## "சாய் சுதர்சனுக்கு வாய்ப்பு வேண்டும்"

மும்பை, ஜூலை 23

4ஆவது டெஸ்ட் போட்டியில் சாய் சுதர்சனுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஹர்பஜன் சிங் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பய ணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4ஆவது போட்டி இன்று தொடங்கவுள்ளது.

இந்த நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்டில் சாய் சுதர்சனை விளையாட வைக்க வேண் டும் என்று இந்திய முன்னாள் வீரரான ஹர்பஜன் சிங் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் கூறியதாவது, இந் திய அணியின் மூன்றாவது இடத்தில் விளையாட சாய் சுதர்சனை தான் பரிந்துரை செய்வேன். ஏனெனில் ஒரு இளம் வீரருக்கு, ஒரு வாய்ப்பை மட்டுமே வழங்கி அவரை தூக்கி எறிவது சரி கிடையாது.

அவருக்கு மூன்றாம் இடத்தில் விளையாட குறைந்தது மூன்று போட்டிகளாவது வாய்ப்பு வழங்க வேண்டும். அப்படி கொடுத்தால் மட்டுமே அவரிடம் இருக்கும் திறமை வெளிப்படும். அதை தவிர்த்து கருண் நாயருக்கு அந்த இடத்தை வழங்கி அதில் அவர் மோசமான செயல் பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். என்னைப் பொறுத்த வரை இளம் வீரரான சாய் சுதர்சனிடம் நல்ல திறமை உள்ளது.

அவரை இந்திய அணியின் நிர்வாகம் ஆதரிக்க வேண் டும்.- என்றார். (எ)

# இந்திய டெஸ்ட் அணியில் அன்ஷூல் காம்போஜ்


புதுடில்லி, ஜூலை 23

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந் திய கிரிக்கெட் அணியில் 2 வீரர்கள் காயமடைந்துள்ள தால் வேகப்பந்து வீச்சாளர் அன்ஷூல் காம்போஜ் இணை யவுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பய ணம் செய்து 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் இன்று 23ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில் இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணியில் இடம்பெற்றுள்ள வேகப்பந்து வீச்சாளர்களான ஆகாஷ் தீப், அர்ஷ்தீப் சிங் ஆகிய இருவரும் காயமடைந் துள்ளனர். ஆகாஷ் தீப் இடுப்பு வலியால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் அவர், 4ஆவது போட்டிக்கு முன்ன தாக முழுவதும் குணமடைவாரா என்பது தெரியவில்லை. அவரது உடல்நிலையை இந்திய அணி நிர்வாகம் கவனித்து வருகிறது.

எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்திய தேர்வுக்குழுவினர் அன்ஷூல் காம்போஜை மாற்று வீர ராக அணியில் சேர்த்துள்ளனர். இவர் 4ஆவது போட் டிக்கு முன்னதாக இங்கிலாந்து சென்று இந்திய அணியு டன் இணைவார் என்று கூறப்படுகிறது. அன்ஷூல் காம் போஜ் சமீபத்தில் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக




நடைபெற்ற 2 அதிகாரபூர்வமற்ற டெஸ்ட் போட்டிகளில் இந்தியா ஏ அணிக்காக விளையாடியுள்ளார். அப்போது 5 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகள்...

இதுதவிர, ஆடைகள் சிலவும் நேற்றைய தினம் கண்டறியப்பட்டன.

இதேவேளை, அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இதுவரை 80 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், 65 மனித எலும்புக்கூடுகள் புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## ஊழியரின்...

சட்டமூலம்மீதான இரண்டாம் வாசிப்புமீதான விவாதத்தை தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது சபையில் இருந்த சகலரும் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். எவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. எனினும், 42 பேர் சமுகமளித்திருக்கவில்லை. இதனால், 182 வாக்குகளால் இரு சட்டமூலங்களும் நிறைவேற்றப்பட்டன.

புதிய திருத்தச் சட்டத்துக்கு அமைய ஊழியர்களின் ஆகக்குறைந்த சம்பளம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் 27 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2026 ஜனவரி முதலாம் திகதி முதல் 30 ஆயிரம் ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விருட்சத்துக்கு...

மறுதினமும் நல்லூர் கிட்டு (சங்கிலியன்) பூங்காவில் நடைபெற வுள்ளது. இதற்கு ஆதரவாக விடுதலை விருட்சம் நடுகை செய்யப்படவுள்ளது. இவற்றுக்குத் தண்ணீர் சேகரிக்கும் பணி தமிழர் தாயக பகுதியில் மேற்கொள்ளப்படுகிறது.

இதற்காக தண்ணீர் சேகரிக்கும் வாகன பவனி நேற்றைய தினம் திருநெல்வேலியில் ஆரம்பமானது. குறித்த வாகனம் தங்கள் பிரதேசத்துக்கு வருகை தரும்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் விதமாக ஒரு குவளை தண்ணீரை வழங்குமாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பு கேட்டுள்ளது. (ஐ)

## புலமைப்...

குறிப்பில்,

2025ஆம் ஆண்டுக்கான தரம் - 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி நடைபெறும். பகுதி 2 வினா பத்திரம் காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 10.45 மணி வரையும் பகுதி 1 வினா பத்திரம் முற்றபகல் 11.15 மணி தொடக்கம் 12.15 மணி வரையும் நடைபெறும்.

இதற்காக நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 787 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளினதும் அனுமதி அட்டைகள் பாடசாலைகளின் அதிபர்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பாடசாலை அதிபர்கள் www.doenets.lk இற்குப் பிரவேசித்து "எமது சேவை" இன் கீழுள்ள Exam Information Centreஇன் மீது சொடுக்குவதன் மூலமோ அல்லது http://onlineexams.gov.lk/eicஇற்கு பிரவேசிப்பதன் மூலம் அவற்றை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகளின் தகவல்களில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருப்பின் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை நிகழ்நிலையில் அதனை மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 011-2784208, 011-278 4537, 011-278 6616, 011-2785413 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அல்லது 1911 என்ற துரித அழைப்பு இலக்கத்துக்கு அல்லது 011-2784422 தொலைநகல் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தென்னக்கோன்...

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் தவறான நடத்தை, அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரிக்க உயர்நீதிமன்ற நீதியரசர் பி. பி. சூரசேன தலைமையில் நீதியரசர் நீல் இத்தவெல, தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர் லலித் ஏகநாயக்க ஆகியோர் கொண்ட விசாரணை குழு நியமிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. 10இற்கும் மேற்பட்ட தடவைகள் கூடிய இந்தக் குழு விசாரணைகளை நடத்தியதுடன், சாட்சிகளையும் சேகரித்தது. விசாரணைகள் முழுமையாக நிறைவடைந்த நிலையில் விசாரணை அறிக்கையை அந்தக் குழு சபாநாயகரிடம் வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னக்கோன்மீது 22 குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று கூறியுள்ளார்.

இதனிடையே, குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபரை நீக்குவதற்கான தீர்மானத்தை பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் சபாநாயகர் சமர்ப்பிக்க வேண்டும். இந்த விதிகளின் கீழ், பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளின்படி தீர்மானம் விவாதிக்கப்பட்டு, பெரும்பான்மை எம். பிக்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட வேண்டும். இவ்வாறு நிறைவேற்றப்பட்டதும் ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும். 2002ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க அதிகாரிகளை நீக்குதல் (நடைமுறை) சட்டத்தின் கீழ் பொலிஸ் மா அதிபரை பதவி நீக்கம் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொலிஸ் மா அதிபர் ஒருவர் பதவி நீக்கம் செய்யப்படுவது இதுவே முதன் முறையாகும். (ஐ)

## காணாமல்...

ஆராயப்படவுள்ளது. இது தொடர் பில் பரிந்துரைகளையும் - அவதானிப்புகளை யும் சர்வதேச மன்னிப்பு சபை 22 பக்க அறிக்கையில் முன்வைத்துள்ளது. அதி லேயே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இலங்கையின் உள்நாட்டு போரின் இறுதியில் சரணடைந்தவர்களின் பெயர் விவரங்களை பெற்று வெளியிடுவதன் மூலம், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலில் தொடர்பு பட்ட படையினர், பிற குற்றவாளிக ளிடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த புதுப்பிக்கப் பட்ட தகவல்களை வழங்குவதன் மூலம் காணாமல் போனோர் பணிமனை காணாமல் ஆக்கப்பட்டோரை தேடுவதற்கான அதன் ஆணையை நிறைவேற்றுவதில் குறிப்பிடதக்க முன்னேற்றத்தை காண்பிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

காணாமல் போனவர்களின் பணிமனை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண்பிக்காதமைக்கு அதன் தலைமைத்துவத்தை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும், அதன் ஒழுங்கமைப்பில் மாற்றங்கள் தேவை, அந்த பணிமனைக்கு நியமிக்கப்படுபவர்கள் திறமைசாலிகள், அர்ப்பணிப்பு உள்ளவர்கள் - சுயாதீனமானவர்களாக விளங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

தொடரும் மனித புதைகுழி அகழ்வுகள் தொடர்பில் மிகவும் அவசரமாக காணாமல் போனவர்கள் பணிமனை வெளிநாட்டு தொழில்நுட்ப நிபுணத்துவத்தை கேட்டுப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

பல தசாப்தங்களாக பதில்களைக் கோரும் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் கோரிக்கைகளை அவசரமாகவும் உண்மையாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் உண்மை நீதி மற்றும் இழப்பீட்டுக்கான உரிமைகளுக்கு அதிகாரிகள் முன்னுரிமை வழங்க வேண்டும் - அவற்றை மதிக்கவேண்டும் - அதற்கு உதவவேண்டும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ரயிலேறி சகோதரத்துவத்தையே நாங்கள் கொண்டு வருகிறோம்

## சோசலிச இளைஞர் சங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

"அன்று ரயிலேறி யாழ்ப்பாணத்துக்கு வைராக்கியம், குரோதம், பிரிவினையையே கொண்டு வந்தனர். அதன்மூலம் யாழ். நூலகத்தை எரித்து நாசமாக்கினார்கள். இன்று நாம் ரயிலேறி சகோதரத்துவத்தை கொண்டு வருகின்றோம். வடக்கையும், தெற்கையும் இணைக்கும் உறவு பாலத்தை ஏற்படுத்த வருகின்றோம்."- என்று சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசியக் குழு உறுப்பினர் மகேஷ் அம்பேபிட்டிய தெரிவித்தார்.

சகோதரத்துவ தினம் தொடர்பில் நேற்றைய தினம் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பணிமனையில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

மேலும், "சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் 2008 ஆம் ஆண்டு முதல் சகோதரத்துவ தின நிகழ்வுகளை நடத்தி வருகிறோம். சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்காக 17 ஆண்டுகளாக செயல்படுகிறோம். இந்த முறை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சகோதரத்துவ ரயில் பயணம் நடைபெறவுள்ளது.

1981 மே 31 ஆம் திகதி யாழ்.வந்த ரயில் நிலையத்தில் குருநாகல் ரயில் நிலையத்தில் இருந்து அரசியல் குழு வொன்று ஏறியது. காமினி லொக்குகே, காமினி திஸநாயக்க, காமினி ஜயவிக் கிரம, சிறில் மத்தியூ, கிறிஸ்டன் பெரேரா, ரணில் விக்கிரமசிங்க உள் ளிட்ட குழுவினர் வைராக்கியம், குரோ தம், பிரிவினையை எடுத்து வந்தனர். அவற்றை எடுத்து வந்துதான் ஆசியா வின் மிகப்பெரிய பொக்கிஷமான நூல கத்தை எரிந்தனர். எனவேதான் அந்த ரயிலில் சகோதரத்துவத்தை நாம் நாளை எடுத்துவருகிறோம்.

"1981இல் ஆரம்பமான குரோதம் 1983 இல் கறுப்பு ஜூலையாக மாறியது. இறுதியில் பிரச்னை போர் வரை வந்தது. இந்த கறுப்பு புள்ளி இன்னும் நீங்கவில்லை. ஆட்சியாளர்களும் அரசியலுக்காக மக்களை பிரித்தாளும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். வடக்கையும், தெற்கையும் தமது அரசியலுக்காக அரசியல்வாதிகள் பிரித்தார்கள். தமது சுகபோக வாழ்வுக்காக மக்களை பிரித்தார்கள். அந்த யுகம் தற்போது முடிந்துவிட்டது. புதிய நாடு உருவாகி வருகிறது. புதிய யுகத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறோம். தேசிய சமத்துவமே அரசாங்கத்தின் நோக்கம். அதற்காக ஜனாதிபதியும் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றனர்", என்றார்.

(ஐ-03-05)

# தோட்ட தொழிலாளருக்கு ரூ. 1,700; சம்பள அதிகரிப்பை வழங்குங்கள்

## எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 23

குறைந்தபட்ச வேதனம் அதிகரிக்கப்படுவது போலவே அரசாங்கம் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் ஆயிரத்து 700 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் இடையீட்டு கேள்வி ஒன்றை எழுப்பிய போதே அவர் மேற்கெண்டவாறு கூறினார்.

அத்துடன், அரசாங்கம் பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ள கட்டளை சட்டத்தின் ஊடாக வேலையாட்களுக்கான குறைந்தபட்ச வேதனத்தை டிசெம்பர் முதல், 21 ஆயிரம் ரூபாய் முதல் 27 ஆயிரம் ரூபாய் வரையிலும், ஜனவரி மாதம் முதல் அதை 30 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இது நல்லதொரு விடய மென்பதால் இதற்கு எதிர்க்கட்சியின் ஆதரவைத் தருகிறோம். - என்றார்.

## படுகொலை...

அமைச்சர் மகிந்த ஜயசிங்ஹ.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் வேலையாட்களின் குறைந்தபட்ச வேதன திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் தொழில் பிரதி அமைச்சர் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது, இராதாகிருஷ்ணன் எம். பி. ஒழுங்கு பிரச்னை ஒன்றை எழுப்பினார். ஆனால், செவிமடுக்காமல் பிரதி அமைச்சர் மகிந்த "எதிராளிகளாக இருந்த சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ, தயாசிறி ஜயசேகர நீங்கள் எல்லோரும் கொழும்பு மாநகர சபை ஆட்சியை கைப்பற்ற ஒன்றிணைந்தீர்கள். ஊடக சந்திப்புகளை நடத்தினீர்கள். எதிர்கால நண்பர்களானீர்கள்", என்று கூறினார்.

இதன்போது, "குறுக்கிட்ட நாமல் ராஜபக்ஷ எம். பி. ஏன் நீங்களும் எமது நண்பர்தானே", என்றார்.

இதையடுத்து, தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்ஹ கோபத்துடன், "நீங்கள் நல்லவர்களா? தாஜூதீனைக் கொன்றவர்கள். படுகொலையாளிகளை, வெள்ளை வான் கடத்தல்காரர்களை பாதுகாத்தவர்கள். உங்கள் தந்தை எத்தனை பேரை வேட்டையாடினார். சரத் பொன்சேகாவை என்ன செய்தீர்கள்? உங்களை எதிர்ப்பவர்களை இருக்கவிட்டீர்களா? ஆகவே, என்னிடம் வாய் கொடுத்து வாங்கிக்கட்டிக் கொள்ள வேண்டாம்", என்றார். (ஐ)

## கடனை...

முழுமையாக நிறைவடைந்த பின்னர் 50 ரூபாய் வரியை நீக்குவது குறித்து பரிசீலிப்போம் என்று நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் கேள்விக்கு பதிலளித்தபோது எரிசக்தி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## 86கைக்குண்டு...

நிலையில் இவற்றை கொழும்பு புலனாய்வுத்துறை அதிகாரிகள் கைப்பற்றினர்.

நேற்றுமுன்தினம் கைத்துப்பாக்கியுடன் கொழும்பில் ஒ்ருவர் கைது செய்யப்பட்டார். முன்னாள் போராளி என்று கூறப்படும் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் நேற்றைய தினம் செட்டிகுளம், நேரியகுளம் பகுதிகளில் இரு வீடுகளில் பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன்போது, நேரியகுளத்தில் வீடு ஒன்றில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பரல் தோண்டி எடுக்கப்பட்டது. அதற்குள், 86 கைக்குண்டுகள், ரி -56 ரக துப்பாக்கிகளுக்கான ரவைகள், கைத்துப்பாக்கிக்கான ரவைகள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பவை காணப்பட்டன. இதையடுத்து, அந்த வீட்டின் உரிமையாளரும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த புலனாய்வு பிரிவு அதிகாரிகளுடன் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரும் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# காணியை விட்டு வெளியேறுமாறு தையிட்டி விகாராதிபதிக்கு கடிதம்

## வலி.வடக்கு தவிசாளர் அனுப்பினார்

யாழ்ப்பாணம், ஜூலை 23

**ஆக்கிரமிக்கப்பட்ட காணியில் இருந்து உடனடியாக வெளியேறுமாறும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தையிட்டி விகாரையின் விகாரதிபதிக்கு வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.**

தையிட்டியில் உள்ள தனது காணியில் அடாத்தாக சட்டவிரோத கட்டடம் ஒன்றை அமைத்து வருவதாக எமக்கு ஒருவர் முறைப்பாடு அளித்துள்ளார்.

எனவே முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ள காணியில், தங்களுக்கு சட்ட ரீதியான உரித்து காணப்பட்டால், அவற்றுக்கான ஆவணங்களை பிரதேச சபையில் சமர்ப்பிக்கவும்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் உடனடியாக அக்காணியில் இருந்து வெளியேறவேண்டும். தவறின் தங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தையிட்டி விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தரமா தேரருக்கு தவிசாளர் சோ. சுகிர்தன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (அ)

# ரி-56 துப்பாக்கி வைத்திருந்த முன்னாள் போராளி கைது

கொழும்பு, ஜூலை 23

பேலியகொடைப் பகுதியில் ரி-56 துப்பாக்கியுடன் ஒருவர் கிரிபத்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின்போது, குறித்த நபர் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து ஒரு ரி-56 துப்பாக்கி, 30 தோட்டாக்கள், ஒரு மகசின் மற்றும் 5 கிராம் 560 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

குறித்த நபர் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் என்றும், பின்னர் இராணுவத்தால் புனர்வாழ்வளிக்கப்பட்டவர் என்றும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயதுடையவர் ஆவார்.

மேலும், அவர் ஒரு குற்றத்தைச் செய்வதற்காக துப்பாக்கியுடன் வந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறெனினும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மலேசியாவிலிருந்து இலங்கைக்கு ஓக. 22 முதல் விசேட விமான சேவை

கொழும்பு, ஜூலை 23


மலேசியா எயார்லைன்ஸ், அதன் பிராந்திய வலையமைப்பில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவைக்கு பதிலளிக்கும் விதமாக, ஓகஸ்ட் 22 முதல் கொழும்புக்கு மூன்று வாராந்த அகல-உடல் விமானங்களைச் சேர்ப்பதாக அறிவித்துள்ளது.

இந்த விமான நிறுவனம் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கொழும்பு-கோலாலம்பூர் வழித்தடத்தில் எயார்பஸ் ஏ 330 விமானங்களை நிறுத்தும்.

ஒவ்வொரு ஏ 330 விமானமும் 27 வர்த்தக சொகுசு இருக்கைகளையும் 261 பொருளாதார வகுப்பு இருக்கைகளையும் கொண்டுள்ளது.

தெற்காசியாவில் மலேசியா எயார்லைன்ஸின் இருப்பை வலுப்படுத்துவதையும், இலங்கை - மலேசியாவுக்கிடையிலான பயணம் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# புதிய பிரதம நீதியரசராக பிரீத்தி பத்மன் சூரசேன!



கொழும்பு, ஜூலை 23

இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேனவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பரிந்துரைத்துள்ளார். அரசியலமைப்புச் சபை இன்று புதன்கிழமை கூடும் போது இது ஆராயப்படும்.

தற்போதைய பிரதம நீதியரசர் முர்து பெர் னாண்டோ ஜூலை 27 ஆம் திகதி ஓய்வு பெற உள்ளார். ஜூலை 25 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் முறையான பிரியாவிடை உரை நிகழ்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களில் ஒருவரான நீதியரசர் சூரசேன, முன்னர் நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

அவர் பல உயர்மட்ட வழக்குகளுக்கு தலைமை தாங்கியுள்ளார். மேலும், தற்போது நடந்து வரும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோ னுக்கு எதிரான தவறான நடத்தை குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் சிறப்புக் குழுவின் தலைவராக உள்ளார். (அ)

# தமிழக அகதிகள் முகாமில் இருந்த இலங்கை பெண்ணின் சடலம் மீட்பு!

சென்னை, ஜூலை 23

தமிழகத்தின், கும்பிடிபூண்டி இலங்கைத் தமிழர் ஏதிலிகள் முகாமைச் சேர்ந்த பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொளத்தூர், தனம்மாள் நகர் முதல் தெருவின் வீடு ஒன்றிலிருந்து இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. எனினும் அவர் இறப்பு குறித்த காரணங்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

சடலம் தற்போது கீழ்பாக்கம் அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழகத்திலும் ஏனைய மாநிலங்களிலும் இலங்கையின் ஆயிரக்கணக்கான ஏதிலிகள், முகாம்களிலும் வெளியிடங்களிலும் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரோம் சட்டத்தில் இலங்கை கையொப்பமிட வேண்டும்!

## சுமந்திரன் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 23

ரோம் சட்டத்தில் இலங்கை கையொப்பமிட வேண்டும் எனத் தாம் தொடர்ச்சியாக வலியுறுத்தியதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஐக்கிய நாடுகள் சபையின், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்துக்கு நேற்று முன் தினம் அனுப்பப்பட்ட பரிந்துரைக் கடிதத்தை மேற்கோள்காட்டி அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உத்தியோகப்பூர்வ அறிவிப்பைத் தாம் வரவேற்பதாகவும், எம்.ஏ.சுமந்திரன் தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். (அ)

# ரோம் சாசனம் குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்!

## மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

மனித புதைகுழிகளில் அடையாளம் காணப்படும் மனித எச்சங்களை அகழ்வதற்கு அவசியமான நிதி நிபுணத்துவம் மற்றும் வளங்களை இலங்கை அரசாங்கம் வழங்கவேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

அத்துடன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சாசனத்தை ஏற்றுக்கொள்வது குறித்து இலங்கை ஆராயவேண்டும் எனவும் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான குழுவின், 29 ஆவது அமர்வில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், கடந்த காலங்களில் வெளியிட்ட உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகள் பரிசீலிக்கப்பட்டதாகவும், 21ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், 2009 ஆம் ஆண்டு மே 17 மற்றும் 18ஆம் திகதிகளில் பாதுகாப்புப் படைகளிடம் சரணடைந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமற்போன சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை செய்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கான பரந்துரைக்கப்பட்ட அதிகாரங் களை கொண்ட புதிய நிரந்தர நிறுவனமொன்றை உருவாக்கவேண் டும் என்றும் ஆணைக்குழு பரிந்து ரைத்துள்ளது.

இதேவேளை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சாசனத்தின் ஒரு தரப்பினராக மாறுவதைக் கருத்தில் கொண்டு காணாமலாக்கப்படும் சம்பவங்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்று பட்டியலிடுமாறும் இலங்கை அரசாங்கத்துக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. (அ)

# இந்திய மீனவர்கள் நான்கு பேர் கைது!

## மன்னார் கடற்பரப்பில் வைத்து

மன்னார், ஜூலை 23

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நால்வர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 4 மீனவர்களே மீன்பிடிப்படகு ஒன்றுடன் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில், குறித்த படகையும் அதிலிருந்த நான்கு மீனவர்களையும் கைது செய்து மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், ஆரம்பகட்ட விசாரணையை முடித்துக் கொண்டு மீனவர்கள் நான்கு பேரையும் மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை கடற்படையின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை இராமேஸ்வரத்தை சேர்ந்த 25 மீன்பிடிப்படகுகளும் 185 மீனவர்களும் இலங்கை கடற்படையால் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org